# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE








வியாழக்கிழமை 16.09.2021 | supeedsam.com | supeedsam@gmail.com


# சம்பந்தனின் நிலைப்பாட்டை மறுத்துச் செயற்பட்டால் அது இலங்கை தமிழரசுக்கட்சி கட்சிக்கு முரணான விடயம்

## சாணக்கியன் சாடல்



(துதிமோகன்)

தலைவர் சம்பந்தன் ஐயாவின் நிலைப்பாட்டினை மறுத்துச் செயற்பட்டால் அது இலங்கை தமிழரசுக்கட்சி கட்சிக்கு முரணான விடயம் என்பதுடன் அதனை, பலவீனப்படுத்தும் செயற்பாடு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

சாணக்கியனின் செய்தியை வீடியோ வடிவில் பார்க்க ஸ்கேன் செய்யவும்

## இலங்கை தொடர்பில் கவலை வெளியிட்டுள்ள பிரித்தானியா தலைமையிலான குழு

இலங்கையில் தற்போதைய மனித உரிமை முன்னேற்றங்கள், பொறுப்புக்கூறல், பயங்கரவாத தடுப்புச் சட்டம் உட்பட விடயங்கள் தொடர்பில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கைக்கான முக்கிய குழுவில் அங்கம் வகிக்கும் கனடா, ஜெர்மனி, வடக்கு மாசிடோனியா, மலாவி, மொண்டினீக்ரோ மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் கவலையை எழுப்பியுள்ளன.

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ் கைதிகளை அச்சுறுத்திய அமைச்சர் பதவி விலகினார்

(காந்தன்)

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு பொறுப்பேற்று தான் பதவி விலகுவதாக இராஜாங்க அமைச்சர் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், அவரது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## இலங்கை உடன்படாமை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் அதிருப்தி

கடந்த கால மோதலின் விளைவுகளை நிவர்த்தி செய்வதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கான ஒப்புதல்களை உறுதி செய்வதற்கும், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை வளர்ப்பதற்கும், இலங்கை உடன்படாமை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் பொறுப்புக்கூறல் மற்றும் மனித

02 ஆம் பக்கத்தில்...

## ஐக்கிய நாடுகள் சபை கண்டனம்



சிறைக் கைதிகளைத் தவறாக நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பது தேசத்தின் கடமை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## சில கட்டுப்பாடுகளின் கீழ் எதிர்வரும் வாரம் நாட்டை திறக்க முடியும்



(காந்தன்)

எதிர்வரும் வாரம் சில கட்டுப்பாடுகளின் கீழ் நாட்டை திறக்க முடியும் என கொவிட் பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு நிலையத்தின் பிரதானி இராணுவ தளபதி ஷவேந்திர சில்வா தெரிவித்துளளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட இராணுவ தளபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் வெள்ளிக்கிழமை இது தொடர்பான இறுதி முடியு வழங்கப்படும் என இராணுவ தளபதி தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## முழுமையாக திறக்கும் நிலையில் நாடு இல்லை

### வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டு

(ஊர்காவலன்)

நாட்டை முழுமையாக திறக்கும் அளவுக்கு ஆரோக்கியமான மட்டத்தை நாம் இன்னமும் அடையவில்லை என்று சுகாதார வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போதும் நாட்டில் டெல்டா வைரஸ் தொற்று வேகமாக பரவிக் கொண்டுள்ளது. இவ்வாறான நிலையில் கட்டுப்பாடுகள் இல்லாது நாட்டை திறந்தால், மிக மோசமான இன்னொரு கொவிட் வைரஸ் அலைக்கு முகங்கொடுக்க நேரிடும் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை பலவீனமான சுகாதார கட்டமைப்பு காரணமாக நாட்டில் தென்னாபிரிக்க வைரஸ் பரவ அதிக வாய்ப்புகள்

02 ஆம் பக்கத்தில்...

## அம்பாறையில் இராஜாங்க அமைச்சரோருவர் மக்களால் நையப்புடைக்கப்பட்டு விரட்டியடிப்பு



(ஏ.பி.எம்.அஸ்ஹர்)

அம்பாரையில் இராஜாங்க அமைச்சரொருவர் மக்களால் நையப்புடைக்கப்பட்டு

02 ஆம் பக்கத்தில்...

## இந்த அரசாங்கம் பாசிச ஆட்சியை நோக்கி நகர்கின்றதா?

### சபா குகதாஸ் கேள்வி



இந்த அரசாங்கம் பாசிச ஆட்சியை நோக்கி நகர்கின்றதா என முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சபா குகதாஸ் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார். தமிழ் அரசியல் கைதிகளை இராஜாங்க அமைச்சர் ரொஹான் ரத்வத்த அவர்கள் மிரட்டியமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## இத்தாலியிலுள்ள இலங்கையர்கள் பிரதமருடன் சந்திப்பு



(வாஸ் கூஞ்ஞ)

இலங்கைக்கு திரும்பும் எதிர்பார்ப்புடன் காணப்படும் இத்தாலியிலுள்ள இலங்கை மக்களுக்கு இருபது ஆண்டு சேவை காலத்தின் பின்னர் அந்நாட்டில் வழங்கப்படும் ஓய்வூதியத்தை தாய்நாட்டிற்கு திரும்பிய பின்னரும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை பெற்றுத் தருமாறு இத்தாலியில் வாழும் இலங்கை மக்களுக்கும் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

02 ஆம் பக்கத்தில்...






## தோல்வியின் விளிம்பை கண்டவர் விக்கி மக்களைக் காக்க யார் பின்னாலும் செல்வேன்



(குகதர்சன்)

என்னுடைய மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்பவர் நாமல் ராஜபக்ஷ வாக இருந்தால் என்ன அல்லது வேறு யாராவதாக இருந்தால் என்ன எவர் பின்னாலும் செல்லத் தயாராக இருக்கிறேன் என யாழ் மாவட்ட அபிவிருத்தி

02 ஆம் பக்கத்தில்...

## நோர்வே நாடாளுமன்ற உறுப்பினராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யுவதி தேர்வு



இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த கம்ஷாஜினி குணரட்னம் நோர்வே நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து மூன்று வயதில் நோர்வேக்குச் சென்ற கம்ஷாஜினி குணரட்னம் தொழிலாளர் கட்சியில் போட்டியிட்டார்.

02 ஆம் பக்கத்தில்...






## அம்பாரையில் இராஜாங்க அமைச்சரொருவர்

கூச்சலிட்டு விரட்டி விடப்பட்ட சம்பவமொன்று நேற்று புதன் கிழமை அம்பாரையில் இடம் பெற்றுள்ளது.

வனஜீவராசிகள் இராஜாஙக அமைச்சர் விமலவீர திஸாநாயகவே இவ்வாறு பொது மக்களால் நையப்புடைக்கப்பட்டு விரட்டப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது; விவசாயிகளின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் தான் தோன்றித்தனமாக தனது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி அம்பாரை ரஜவெவ பிரதேசத்தில் விவசாய நிலங்களை மறித்து மீன் குளங்களை நிர்மாணித்துள்ளார்.

இம்மீன் குளத்தில் உத்தியோகபூர்வமாக.மீன் குஞ்சுகளை விட வந்தே போதே அமைச்சருக்கும் இப்பிரதேச வாசிகளுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது இதன் போது இப்பிரதேசவாசிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டு கூக்குரலிட்டு அமைச்சரை விரட்டியடித்துள்ளனர்.

## முழுமையாக திறக்கும் நிலையில் நாடு

உள்ளதாகவும் சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாடாக இன்னமும் கொவிட் வைரஸ் பரவல் அச்சுறுத்தலில் இருந்து நாம் விடுபடவில்லை, ஒவ்வொரு நாளும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர், ஒரு வாரத்தில் பத்தாயிரத்திற்கு அதிகமான வைரஸ் தொற்றாளர்களும், ஆயிரம் அல்லது ஆயிரத்தையும் தாண்டிய வாராந்த கொவிட் மரணங்களும் இன்னும் நாட்டில் பதிவாகிக்கொண்டிருக்கின்றது என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில். இது சாதாராண நிலைமை அல்ல, நாம் இப்போது கட்டுப்பாடுகள் இல்லாது செயற்பட முடியும் என்றோ அல்லது நாடு தற்போது எச்சரிக்கை மட்டத்தில் இருந்து விடுபட்டுள்ளது என்றோ எம்மால் ஒரு போதும் கூறிவிட முடியாது எனக் கூறியுள்ள இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன, நாம் இப்போதும் சிவப்பு எச்சரிக்கை மட்டத்திலேயே உள்ளோம் எனக் கூறியுள்ளார்.

## சில கட்டுப்பாடுகளின் கீழ் எதிர்வரும் வாரம்

நாட்டை திறப்பதென்றால் அதற்கான வழிக்காட்டல் பரிந்துரைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி, கடந்த வாரம் இடம்பெற்ற கூட்டத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கமைய பரிந்துரைகளுக்கமைய நாட்டை நடத்தி செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் வாரம் நாட்டை திறப்பதற்கே அதிக வாய்ப்புகள் உள்ளது. சுகாதார வழிமுறைகளின் கீழ் சில கட்டுப்பாடுகளுடன் நாடு திறப்படலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஐக்கிய நாடுகள் சபை கண்டனம்

மண்டேலா விதிமுறைகளின்படி, கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும் என இலங்கையில் ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர்ஹம்டி கூறியுள்ளார்.

இலங்கையின் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே, அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று அங்கு, அரசியல் கைதிகள் இருவரை அவருக்கு முன்னால் மண்டியிடச் செய்ததாக வெளியான தகவல் தொடர்பிலேயே இவ்வாறு கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

## இலங்கை உடன்படாமை குறித்து

உரிமைகளுக்கான தொடர்ச்சியான முயற்சிகளின் அவசியத்தை ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

காணாமல்போனோருக்கான அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகத்தின் திறமையான பணியை உறுதிப்படுத்துவது உட்பட, ஒரு நிலையான நல்லிணக்க செயல்முறையைப் பராமரிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின், நோக்கங்களை ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் அது தொடர்பான அர்ப்பணிப்புகளை செயல்படுத்த, இலங்கை அரசாங்கத்துக்கு, ஐரோப்பிய ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

சர்வதேச விதிமுறைகள் மற்றும் மனித உரிமைகள் தரத்திற்கு இணங்க, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைத் திருத்துவதன் முக்கியத்துவத்தை ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பாக சுலோவேனியாவின் பிரதிநிதி அனிதா பிபன் நேற்றைய அமர்வில் கூறியுள்ளார்.

## இலங்கை தொடர்பில் கவலை வெளியிட்டுள்ள

ஒரு விரிவான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறையின் முக்கியத்துவத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக முக்கிய குழு குறிப்பிட்டுள்ளது.

நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கும், காணாமல் போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் தொடர்ச்சியான வேலைகளை உறுதி செய்வதற்கும் இலங்கைக்கு அழைப்பு விடுப்பதாக ஜெனீவாவுக்கான இங்கிலாந்தின் தூதர் சைமன் மான்லி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மையக் குழுவின் சார்பாக நடந்துகொண்டிருக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமர்வில் அவர் இது தொடர்பான அறிக்கையை வெளியிட்டார்.

பொறுப்புக்கூறலில் வரையறுக்கப்பட்ட முன்னேற்றம் கூட ஏற்படாமைக் குறித்து தாம் ஏமாற்றம் அடைந்துள்ளதாக சைமன் மாலி குறிப்பிட்டார். 20082009 இல் 11 இளைஞர்கள் காணாமல் போனது தொடர்பான வழக்கில் அண்மைக்கால விடயங்கள் கவலை அளிப்பதாக அவர் கூறியுள்ளார்.




# தலைமன்னார் கடற்கரையில் போதை பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கும் 29 வரை விளக்கமறியல்



(வாஸ் கூஞ்ஞ)

தலைமன்னார் பாக்கு நீர் கடல் வழியாக 79 மில்லியன் ரூபா பெறுமதியான போதை பொருளை சட்டவிரோதமாக கடத்தி வந்ததாக கைது செய்யப்பட்ட நான்கு நபர்களையும் எதிர்வரும் 29.09.2021 வரை விளக்கமறியலில் வைக்கும்படி மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் கட்டளை பிறப்பித்துள்ளார்.

தலைமன்னார் கிராம கடற்கரை பகுதியில் புதன் கிழமை அதிகாலை ஒரு படகில் 79 மில்லியன் ரூபா பெறுமதியான 9 கிலோ 914 கிராம் ஐஸ் போதைப் பொருள் கடற்படையினரின் கண்காணிப்புக்குள் கைப்பற்றப்பட்டு இவற்றுடன் நான்கு சந்தேக நபர்கள் மன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இவர்களும் கைப்பற்றப்பட்ட போதை பொருளும் நீதவான் முன்னிலையில் புதன் கிழமை (15) பிற்பகல் மன்னார் பொலிசாரால் முன்னிலை படுத்தப் பட்டிருந்தனர்.

இவ் சந்தேக நபர்கள் நான்கு பேரையும் எதிர்வரும் 29.09.2021 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் பெ.சிவகுமார் கட்டளை பிறப்பித்தார்.

## நோர்வே நாடாளுமன்ற உறுப்பினராக

21 ஒக்டோபர் 2015 அன்று குணரட்னம் ஒஸ்லோவின் துணை மேயராக நகர சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டார், அதே நேரத்தில் அவர் 23 ஒக்டோபர் 2019 அன்று மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்று நடந்த தேர்தலில் நோர்வே நாடாளுமன்ற உறுப்பினராக கம்ஷாஜினி குணரட்னம் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நோர்வே எம்.பி.க்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

## தோல்வியின் விளிம்பை கண்டவர் விக்கி மக்களைக் காக்க யார்

ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

விக்னேஸ்வரன் அவர்களின் நேர்மை எனக்கு பிடித்திருந்தது.அவர் மீது நீண்ட காலமாக எனக்கு மதிப்பு இருந்தது. ஆனால் தற்போது அவர் வாயை திறந்தாலே,அவர் மீதான மதிப்பு குறைந்துகொண்டே வருகின்றது. அவர் கூறுகின்ற விடயங்கள் ஒரு சராசரி அரசியல்வாதி போல மாறிவிட்டது. யார் ட்ரெண்டிங்கில் இருக்கின்றார்களோ அவர் மீது தாக்குதலை தொடுக்கின்ற சித்து விளையாட்டில் இறங்கியிருக்கின்றார். இது உண்மையிலேயே வேதனையான விடயம்.

அவர் இருந்து விட்டு விடுகின்ற அறிக்கையில் மூலமே அவர் இருக்கிறார் என்பதே எனக்கு தெரிகின்றது. யார் வெற்றிபெறுவார்கள் யார் தோல்வி அடைவார்கள் என்பதை அவர் கூறமுடியாது. ஏனென்றால் கடந்த தேர்தலில் தட்டுத்தடுமாறி அவருக்கு ஒரு ஆசனம் கிடைத்திருந்தது.

இந்த நிலையில்,நாமல் ராஜபக்சவுக்கு பின்னால் நான் நாங்கள் போகின்றோம் என ஒரு பத்திரிக்கையை சுட்டிக்காட்டி ஒரு கருத்தை தெரிவித்திருந்தார்.

மக்களை கல்வி ரீதியாக பொருளாதார ரீதியாக உறுதி செய்வதற்காக செய்வதற்காக அமைச்சர் நாமல் ராஜபக்சே துணை நிற்பாராக இருந்தால் அவருக்கு பின்னால் நான் முழு இடமும் செல்வேன். என்னுடைய மக்களை வாழ வைக்கவும் என்னுடைய மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் எந்தளவு தூரத்திற்கு நான் செல்வதற்கு தயார்.

நாங்களும் செய்யமாட்டோம் செய்கின்ற அவர்களையும் விட மாட்டோம் என்ற அரசியலை முன்னெடுத்து வருகின்றார்கள். ஜெனிவாவை காரணங்காட்டி ஒவ்வொரு முறையும் வெளிநாட்டிற்கு சுற்றுலா செல்வார்கள் ஆனாலும் கொரோனாவால் இந்த முறை அது நடைபெறவில்லை.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டு நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு தீர்வை தேட முடியும். ஆனால் அன்றாட பிரச்சினைகளுக்கு எந்தவித பதிலையும் வழங்காது அறிக்கை அரசியல் மேற்கொள்வதில் எனக்கு எவ்வித உடன்பாடும் கிடையாது.

யாருக்கு பின்னால் நின்றால் மக்களுடைய தேவையை பூர்த்தி செய்யலாமோ அவர்களுக்குப் பின்னால் நின்று எமது மக்களுக்கு தேவையான விடயங்களை செய்வதை எனது கடமையாக பார்க்கின்றேன்.

இவருக்கு பின்னால் நான் சொல்வதா அவருக்கு பின்னால் நான் சொல்வதா என ஈகோ பார்த்துக் கொண்டிருந்தால் எமது மக்கள் தான் பாதிக்கப்படுவார்கள் என்றார்.

## இந்த அரசாங்கம் பாசிச ஆட்சியை நோக்கி நகர்கின்றதா?

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்றைய தினம் 14ஆம் திகதி, சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் ரொஹான் ரத்வத்த அவர்கள் அனுராதபுரம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்று தமிழ் அரசியல் கைதிகளை கொலை செய்துவிடுவேன் என துப்பாக்கியைக் காட்டி மிரட்டியுள்ளார்.

அவர் அரசியல் கைதிகளுடன் நடந்து கொண்ட விதம் உண்மையிலேயே இந்த அரசாங்கம் ஒரு பாசிச ஆட்சியை நோக்கி அல்லது ஜனநாயக மக்களுடைய வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களை அடக்கி ஆளும் சர்வதிகார ஆட்சியை நோக்கி நகர்கின்றது போல் உள்ளது.

அந்த வகையில் கடந்த மாதம் 13ஆம் திகதி மனித உரிமை பேரவையில் மனித உரிமை உயர்ஸ்தானிகர் அவர்களினால் இலங்கையில் நடைபெறுகின்ற சட்ட மீறல்கள் தொடர்பாக பாரியளவில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் அதனை நிரூபிக்கும் முகமாக, நேற்றைய தினம் சிறைச்சாலையில் அந்த ராஜாங்க அமைச்சர் அவர்கள் நடந்து கொண்டமை அப்பட்டமாக தெரிகின்றது.

கிட்டத்தட்ட இருபது முப்பது வருடங்களாக எந்தவித குற்றச்சாட்டுகளும் இல்லாமல், மிக மோசமான குற்றச்சாட்டுகளான பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நீண்ட காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை, அந்த ராஜாங்க அமைச்சர் முழங்காலில் மண்டியிட வைத்து அவர்களது தலையில் கைத்துப்பாக்கியை வைத்து அவர்களுக்கு கொலை மிரட்டல் விடுப்பதாக அறியமுடிகின்றது. இத்தனைக்கும் அவர் மது போதையில் இருந்ததாக சிறைச்சாலையில் இருந்து செய்திகள் வந்திருக்கின்றன. உண்மையில் ஒரு இராஜாங்க அமைச்சர், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி ஆயுதத்துடன் சிறைக்குள் செல்வது என்பது மிக அப்பட்டமான ஒரு மனித உரிமை மீறல் ஆகவே கருதப்படுகின்றது.

அதுமட்டுமல்ல சிறையில் இருக்கும் கைதிகளை ஆதி ஆயுதமுனையில் மிரட்டுவது கொலை அச்சுறுத்தல் விடுத்து அவர்களை முழங்காலிட வைப்பது எல்லாம் ஒரு மனித உரிமை மீறல். நாங்கள் இதனை சிறையில் இருக்கும் அத்தனை கைதிகளுக்கும் எடுக்கப்பட்டு இருக்கின்ற ஒரு கொலை அச்சுறுத்தலாகவே பார்க்கின்றோம்.

உண்மையிலேயே இந்த அரசாங்கம் ஜனநாயக ர முறையிலான சட்ட ரீதியான ஆட்சியை முன்னெடுக்கின்றது என்பதனை உறுதிப்படுத்த வேண்டுமேயானால், இந்த செயற்பாட்டினை மேற்கொண்ட அந்த இராஜாங்க அமைச்சர் மீது உடனடி நடவடிக்கை எடுத்து அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இத்தாலியிலுள்ள இலங்கையர்கள் பிரதமருடன் சந்திப்பு

அவர்களுக்கும் இடையிலான சந்திப்பில் பிரதமரிடம் இவ்வாறு கேட்டுக் கொண்டனர்.

இத்தாலியில் வாழும் இலங்கை மக்களுக்கும் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று செவ்வாய் கிழமை (14) போலோக்னா நகரில் இடம்பெற்றது.

இத்தாலியின் பல்வேறு நகரங்களை பிரதிநிதித்துவப்படுத்தி வருகைத்தந்திருந்த இலங்கை பிரதிநிதிகள் இவ்வாறு கௌரவ பிரதமர் தங்கியிருந்த போலோக்னா ஹோட்டலில் கௌரவ பிரதமரை சந்தித்து கலந்துரையாடினர். கொவிட்19 தொற்று நிலைமைக்கு மத்தியில் இவ்வாறு இத்தாலிக்கு விஜயம் செய்து இத்தாலியில் வாழும் இலங்கை மக்களை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கியமை குறித்து இலங்கை பிரதிநிதிகள் கௌரவ பிரதமருக்கு நன்றி தெரிவித்தனர்.

கௌரவ பிரதமர் ஜனாதிபதியாகவிருந்த காலப்பகுதியில் இத்தாலி மற்றும் இலங்கை இடையே ஏற்படுத்தப்பட்ட இருதரப்பு நட்பு காரணமாக இதுவரை இத்தாலியில் வாழும் இலங்கை மக்களுக்கு கிடைக்கும் வசதிகள் தொடர்பிலும் அங்கு வருகை தந்திருந்த பிரதிநிதிகள் நினைவுகூர்ந்தனர்.

மிலான் நகரில் இலங்கை கொன்சியூலர் அலுவலகம் அமைப்பதற்கு அப்போதைய ஜனாதிபதியாகவிருந்த கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் மேற்கொண்ட தொலைநோக்கு செயற்பாடு காரணமாக பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதில் இலங்கையர்கள் பலரது காலமும் பணமும் மிச்சப்படுவதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் மீண்டும் இலங்கைக்கு திரும்பும் எதிர்பார்ப்புடன் காணப்படும் இத்தாலியிலுள்ள இலங்கை மக்களுக்கு இருபது ஆண்டு சேவை காலத்தின் பின்னர் அந்நாட்டில் வழங்கப்படும் ஓய்வூதியத்தை தாய்நாட்டிற்கு திரும்பிய பின்னரும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை பெற்றுத் தருமாறு அங்கு வருகைத் தந்திருந்த பிரதிநிதிகள் கௌரவ பிரதமரிடம் கேட்டுக் கொண்டனர்.

குறித்த முன்மொழிவு தொடர்பில் இத்தாலி அரசாங்கத்துடன் கலந்துரையாடுமாறு கௌரவ பிரதமர், வெளிவிவகார அமைச்சர் கௌரவ ஜீ.எல்.பீரிஸ் அவர்களுக்கு அச்சந்தர்ப்பத்திலேயே அறிவுறுத்தினார்.

ஜி 20 சர்வமத மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இத்தாலிக்கு விஜயம் செய்துள்ள கௌரவ பிரதமர் எதிர்வரும் சில தினங்கள் அங்கு தங்கியிருந்து இராஜதந்திர சந்திப்புகளிலும் ஈடுபடவுள்ளார்.

குறித்த சந்திப்பின் போது வெளிவிவகார அமைச்சர் கௌரவ பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்இ இத்தாலிக்கான பதில் இலங்கை தூதுவர் சிசிர செனவிரத்ன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சம்பந்தனின் நிலைப்பாட்டை மறுத்துச் செயற்பட்டால் அது

மட்டக்களப்பில் உள்ள மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழரசுக்கட்சியின் தீர்மானத்தினை மீறி ஐநாவுக்குக் கடிதம் எழுதியதாக வெளியான கடிதம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் என எட்டு உறுப்பினர்கள் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளைத் தெளிவுபடுத்தவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடகிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும்தான் தமிழ் பிரதிநிதிகளை உருவாக்கிய கட்சி. அந்த நிலைப்பாட்டினை கடந்த நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் நிராகரித்துள்ளதாகவும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கில் தமிழர்கள் மீது பொலிஸாரின் கெடுபிடிகள் அதிகரித்துவருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், ஐ.நா மனித உரிமை பேரவையில் வாசிக்கப்பட்ட அறிக்கையில் மிக முக்கியமான விடயங்கள் பற்றிப் பேசப்பட்டிருந்தது. இலங்கையில் நடந்த மிக முக்கியமான சம்பவங்கள் தொடர்பாகவும் அந்த அறிக்கையில் பேசப்பட்டு இருந்தது.

எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன், ஐ.நாவுக்கு அனுப்பிய கடிதத்திலிருந்த, மிக முக்கியமான விடயங்கள் உள்வாங்கியிருந்ததாகவும் இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும் என்று மறைமுகமாகக் கூறி, இனியும் ஐ.நா மனித உரிமை பேரவையை ஏமாற்றமுடியாது என்ற தகவலையும் கூறியிருக்கின்றார். 120000 பேருடைய வாக்குமூலங்களை எவ்வாறு செயற்படுத்துவது என்பது தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டுள்ளது. ஆகவே அது வரவேற்க வேண்டிய விடயம். ஐ.நாவில் இலங்கை அரசாங்கம் சரணடையும் நிலைப்பாடு இருக்கும்போதும் கூட கடந்த சில நாட்களாக நடக்கும் சம்பவங்களைப் பார்க்கும் போது ஐ.நாவுக்கு போலியான ஒரு நடிப்பை வெளிக்காட்டுகின்றது என்பதை ஐ.நா விளங்கிக்கொள்ள வேண்டும்.

விசேடமாக மட்டக்களப்பில் இரண்டு இளைஞர்கள் மிக மோசமாக பொலிஸாரால் தாக்கப்பட்டு இருந்தனர். வடக்கு கிழக்கில் பொலிஸாரின் அத்துமீறல் இடம்பெற்று வருகின்றதை வண்மையாகக் கண்டிக்கின்றோம். பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்து வைத்திருக்கும் கைதிகளை அனுராதபுரம் சிறையில் வரிசையில் முழங்கால் இட்டு அவர்களது தலையில் துப்பாகி வைத்து அச்சுறுத்தியதாகச் சமுக வலைத்தளங்களில் காணக் கூடியதாக இருக்கின்றது.

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த இராஜாங்க அமைச்சரை உடனடியாக கைது செய்ய வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.

**(வாஸ் கூஞ்ஞ)**

கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுராதபுரம் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் இருவரை முழந்தாளிட்டு இருக்கச் செய்து தனது கைத் துப்பாக்கியை காட்டி கொலை செய்து விடுவதாகவும் மிரட்டி உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்டவரை உடன் கைது செய்ய வேண்டும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுராதபுரம் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் இருவரை முழந்தாளிட்டு இருக்கச் செய்து இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தையை தனது கைத் துப்பாக்கியை காட்டி கொலை செய்து விடுவதாகவும் மிரட்டி உள்ளதாக செய்திகள் வெளியாகியணீருந்தது. இது தொடர்பாக வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தனது அறிக்கையில் இந்த செயற்பாட்டை தமிழீழ விடுதலை இயக்கம் வன்மையாக கண்டிக்கிறது எனவும்

கொலை செய்யும் நோக்கத்துடனும் இனவாத சிந்தனையுடனும் செயல்படும் லொஹான் ரத்வத்தை போன்றவர்கள் அரசியல் தலைமைத்துவத்திற்கு பொருத்தம் இல்லாதவர்கள் அதுவும் தமது வாழ்வை தொலைத்து அப்பாவிகளாக நீண்ட வருடங்களாக சிறையில் வாடிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளிடம் பொறுப்பு வாய்ந்த இராஜாங்க அமைச்சர் இவ்வாறு நடந்து கொண்டமை எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது இந்த செயற்பாடு தமிழ் அரசியல் கைதிகளுக்கு சிறையில் எதுவித பாதுகாப்பும் இல்லை என்பதை உணர்த்துகிறது.

சிறைக்கைதிகளை பார்வையிடுவதற்கு ஆயுதங்களுடன் செல்லலாம் என்று சட்டத்தில் இடம் இருக்கிறதா என்பதனை உரியவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

எனவே ஜனநாயகத்தை கட்டி காப்பதாக கூறிக்கொள்ளும் இன்றைய அரசாங்கமானது சிறைச்சாலைக்குள் துப்பாக்கியோடு சென்றமைக்காகவும் அப்பாவிகளான தமிழ் அரசியல் கைதிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த காரணத்திற்காகவும் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தையை உடனடியாக கைது செய்ய வேண்டும்.

# ஓட்டமாவடி மஜ்மா நகரில் 2525 முஸ்லிம்களின் ஜனாஸாக்களும் 304 ஏனைய இனத்தவர்களின் உடல்களும் நல்லடக்கம்

**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

கொரோனா தொற்றினால் மரணிக்கும் நபர்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி - மஜ்மா நகர் மையவாடியில் இன, மத பேதமின்றி அனைத்து இன மக்களையும் மிகவும் கண்ணியமான முறையில் நல்லடக்கம் செய்யும் பணிகள் இடம்பெற்று வருவதாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

இவ்வருடம் மார்ச் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப்பணியில் இம்மாதம் செவ்வாய்க்கிழமை 14ஆம் திகதி வரை அங்கு 2829 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

அந்தவகையில், 2525 முஸ்லிம்களின் உடல்களும், 159 இந்துக்களின் உடல்களும், 93 பௌத்தர்களின் உடல்களும், 52 கிறிஸ்தவர்களின் உடல்களும் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன என்று தவிசாளர் தெரிவித்தார்.

# சாய்ந்தமருது வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சை நிலையம் திறப்பு





**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சைக்கான விடுதிகள் நேற்று (15) திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலையின் பதில் வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் எம்.எச்.கே.சனூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி சுகுணன் கலந்து கொண்டு இவ்விடுதிகளை திறந்து வைத்தார்

சுமார் 09 லட்சம் ரூபா செலவில் புனரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப்பட்டு, கொரோனா சிகிச்சைக்கென 02 விடுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆண், பெண் கொரோனா தோற்றாளர்களுக்கென தனித்தனியாக ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த இவ் விடுதிகளில் நோயாளிகளுக்கான 50 கட்டில்கள் மற்றும் தாதியர்களுக்கான ஓய்வறைகள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

கல்முனை பிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகளில் கொவிட்19 தொற்றாளர்களுக்கான சிகிச்சை நிலையங்களில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடி காரணமாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி சுகுணன் முன்வைத்த வேண்டுகோளுக்கிணங்க கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் இவ்விடுதிகள் அமைக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.வாஜித், கல்முனை பிராந்திய திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹிர், சாய்ந்தமருது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.நியாஸ், சாய்ந்தமருது வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகளான டாக்டர் திருமதி. சிவாசுப்ரமணியம், டாக்டர் திருமதி எஸ்.ஜே.ஜஹான் உட்பட நிர்வாகத்தினரும் கலந்து கொண்டனர்.

# மன்னாரில் போக்குவரத்து செய்வோர் மீது கொரோனா தடுப்பூசி அடையாள அட்டை பரிசோதனை

## மடு குஞ்சுக்குளம் வீதியும் முடக்கி பரிசோதனை









**(வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏற்கனவே பொது மக்களுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக மன்னார் மாவட்டத்தில் புதன்கிழமை (15) முதல் பிரயாணத்தை மேற்கொள்வோர் மீது கொரோனா தடுப்பூசி அடையாள அட்டை பரிசோதனை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைவாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டதுபோன்று புதன்கிழமை (15) முதல் மன்னார் மாவட்டத்தில் போக்குவரத்து செய்வோரிடம் கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்ட அடையாள அட்டை பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றது.

மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச சுகாதார வைத்தியஅதிகாரிகளின் தலைமையில் சுகாதார திணைக்கள அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு தரப்பினரும் இணைந்து சோதனை சாவடிகளில் வைத்து இவ் பிரயாணிகள் மீது இவ் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மன்னார் மடு குஞ்சுக்குளம் வீதியிலும் பிரயாணத்தை மேற்கொள்வோர் மீது கொரோனா தடுப்பூசி அடையாள அட்டை பரிசோதனை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

பிரயாணங்களை மேற்கொள்வோர் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே இவ் தடுப்பூசி அடையாள அட்டை தற்பொழுது சோதனையிடப்படுகின்றது எனவும் தெரியவருகின்றது.

இது முதல் தடவை என்பதனால் தடுப்பூசி போடாதவர்கள் அடையாளம் காணப்பட்ட அனைவரும் உடனடியாக தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு வைத்திய அதிகாரிகளாலும் பொது சுகாதார பரிசோதகர்களாலும் கடுமையாக எச்சரித்து விட பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் நாட்களில் இந்த நடவடிக்கைகள் மிகவும் இறுக்கமான கட்டுப்பாடுகள் செயல்படுத்தப்பட்டு தடுப்பூசி அட்டை இல்லாதவர்களுக்கு அந்த இடத்தில் பி.சி .ஆர் அல்லது அண்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த. வினோதன் ஏற்கனவே தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




# கந்தளாய் ரஜ எல பிரதேசத்தில் 3000 மாமரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு



**(இஃஜாஸ் ஏ பரீட்)**

சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கு அமைய கந்தளாய் ரஜ எல பிரதேசத்தில் 3000 மாமரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமாகிய கபில நுவன் அத்துக்கோரள தலைமையில் நடைபெற்றது.

டோம் ஜேசி இனத்தைச் சேர்ந்த மாமரக் கன்றுகள் வழங்கப்பட்டதுடன் சிறப்பான முறையில் இவற்றை பராமரிப்பதன் மூலம் 3 வருட காலத்துக்குள் அறுவடையை பெற்றுக்கொள்ள முடியும்.

இதன் மூலம் அதிகமான வருமானத்தை ஏனைய தொழில்களுக்கு புறம்பாக பெற்றுக்கொள்ளக் கூடிய நிலவரம் ஏற்படும்.

நாட்டில் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் இவ்வாறான பல திட்டங்கள் திருகோணமலை மாவட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதேச அரசியல் தலைமைகள் பயனாளிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich Tel : 044 2410241
sikaramgmbh@gmail.com / www.sikaram.com Fax : 044 2410245

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich. NAT:076 565 64 57












# கடை உரிமையாளர் மீது தாக்குதல்

(வடமராட்சி நிருபர்)

தென்மராட்சி வரணியில் கடை உரிமையாளர் ஒருவர் மீது நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

காலை 6 மணிக்கு வரணி இயற்றாலை பகுதியில் இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது.

பருத்தித்துறை வீதி, வரணியில் அமைந்துள்ள கடை ஒன்றின் உரிமையாளர் மீது கொட்டன் பொல்லுகளோடு வந்த 6 பேர் கொண்ட கும்பல் அத்துமீறி வீடு புகுந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளது. அத்துடன் அவரது தொலைபேசியையும் பறித்துக்கொண்டு அந்தக் கும்பல் தப்பிச்சென்றது.இதையடுத்து கடை உரிமையாளர் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கொடிகாமம் பொலிஸார், தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் ஏனையோரை வலைவீசித் தேடி வருகின்றனர்.

# பொத்துவிலுக்கு அமைச்சர் விஜயம்
## கரையோர அபிவிருத்திக்கு 50 மில்லியன் ஒதுக்கீடு

(எம்.ஐ.எம்.றியாஸ்)

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டங்களை கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ் நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

இவ்வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான கள விஜயத்தினை கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ் நில இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்சன டி சில்வா பொத்துவில் அறுகம்பே பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் மாலை விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது பொத்துவில் முகுது மஹா விகாரைக்கும் விஜயம் செய்ததுடன் அதனையொட்டியுள்ள கரையோர பிரதேசங்களையும் பார்வையிட்டாமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் அபிவிருத்திக்கு 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக இதன்போது இராஜாங்க அமைச்சர் கருத்து மொஹான் பிரியதர்சன டி சில்வா தெரிவித்தார்.

இவ்விஜயத்தின் போது வனஜீவ ராசிகள் இராஜாங்க அமைச்சர் விமல வீரதிசாநாயக்க,அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும்,மாவட்ட அபிவிருத்திக் குத் தலைவருமான டப்ளுயு.டி.வீரசிங்க பொத்துவில் பதில் பிரதேச செயலாளர் சந்தரூபன், முகுது மஹா விகாராதிபதி



மற்றும் அமைச்சு உயர் அதிகாரிகள் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# பரிந்துரைக்கப்பட்டுள்ள கிண்ணியா கோரோனா மையவாடிக்கான மின்குமிழ்கள் அன்பளிப்பு



(இஃஜாஸ் ஏ பரீட்)

கொரோனா ஜனாஸாக்களை அடக்கம் செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ள கிண்ணியா வட்டமடு மையவாடிக்கு அத்தியாவசியமான தேவைப்பாடுகளில் ஒன்றாக காணப்பட்ட 10 இலட்சம் பெறுமதியான LED மின்குமிழ்கள் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூபால் கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் கௌரவ நிகாரிடம் செவ்வாய்கிழமை மாலை கையளிக்கப்பட்டன.

இம்மின்குமிழ்களைபெயர்குறிப்பிட விரும்பாத மூன்று குடும்பங்கள் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் ஊடாக அன்பளிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் கோரோனா மரணங்கள் 160



(காரைதீவு நிருபர்)

பதின்மூன்று சுகாதாரப் பிரிவுகளை உள்ளடக்கிய கல்முனைப்பிராந்தியத்தில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை நேற்றுடன்(15) 160ஆகியது என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் குண.சுகுணன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

கடந்த சில நாட்களாக மரணங்களின் வீதமும் தொற்றுக்களின் எண்ணிக்கையும் சற்று குறைவடைந்துவருகின்றது.எனினும் கொரோனா அபாயம் நீங்கிவிட்டதாகக்கருதமுடியாது.

இதுவரை இடம்பெற்ற 160 கொரோனா மரணங்களில் அதிகூடிய 22மரணங்கள் சம்மாந்துறையில் சம்பவித்திருக்கின்றன. அடுத்ததாக 21மரணங்கள் நிந்தவூரிலும் 17மரணங்கள் அக்கரைப்பற்றிலும் இடம்பெற்றிருக்கின்றன.கல்முனை தெற்கு சாய்ந்தமருது கல்முனை வடக்கு ஆகிய மூன்று சுகாதாரப்பிரிவுகளில் தலா 15மரணங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

இதுவரை 6991 தொற்றுக்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் 6411பேர் குணமாகியுள்ள அதேவேளை 160பேர் மரணித்துள்ளனர். தற்சமயம் 420பேர் நோய்ப்பீடித்து சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

# டெங்கு நோய்த்தாக்கம் தீவிரம்

இதேவேளை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் ஜனவரி மாதம் தொடக்கம் இது வரை 217 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மாவட்டத்தில் தற்போது பருவகால மழை பெய்யது வருவதால் டெங்கு நுளம்பு பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அண்மைக்காலமாக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருவதாகவும்இ கூறினார்.

கொரோனா தொற்று தாக்கத்திலும் கல்முனைப் பிரதேசத்தில் ஒருங்கினைந்த சுகாதார மேம்பாட்டு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக டெங்கொழிப்பு நடவடிக்கையினை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கு சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகள் தோறும் டெங்கொழிப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை, நிந்தவூர்,காரைதீவு ஆகிய சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளில் அதிகமாக டெங்கு நோய் பரவக் கூடிய இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான வெற்றுக்காணிகளை வைத்திருப்பவர்கள் இரண்டு வார காலத்திற்குள் துப்பரவு செய்ய வேண்டுமெனவும் தவறும் பட்சத்தில் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

# 14000 மில்லி லீட்டர் கசிப்புடன் பெண்ணொருவர் மட்டக்களப்பில் கைது



(ரீ.எல்.ஜவ்பர்கான் மட்டக்களப்பு)

ஊரடங்குச்சட்ட நேரத்தில் சட்டவரோதமான முறையில் சட்டவிருதமான முறையில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவர் மட்டக்களப்பு சித்தாண்டி பிரதேசத்தில் கைது செய்யப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

கிடைக்கப்பெற தகவலொன்றின் பேரில் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் பணிப்புரைக்கமைய மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைவைப்பின்போது இவர் கைது சேய்யப்பட்டார்.கைதான இவரிடமிருந்து 14000 மில்லி லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

# களுதாவளையில் ஒன்றரை கோடி ருபா செலவில் கார்ப்பட் வீதி!
## கோவிட்டுக்கு மத்தியில் மாத்தளை மேயர் பிரகாஷின் அதிரடி

(காரைதீவு நிருபர்)

மாத்தளை மாநகர எல்லைக்குட்பட்ட களுதாவளை ஆற்றங்கரை வீதி பாதை காப்பட் செப்பனிடும் பணி ஆரம்பிக்கப்படடது.

இவ்வீதியமைப்புப்பணியின் அங்குரார்ப்பணநிகழ்வு நேற்று சுகாதாரமுறைப்படி சம்பிரதாயபூர்வமாக நடைபெற்றது.

மாத்தளை மாநகரசபை மேயர் சந்தனம் பிரகாஷ் இவ்வீதியமைப்புப்பணியின் அங்குரார்ப்பணநிகழ்வில் பிரதமஅதிதியாகக்கலந்துகொண்டார். மாநகரசபையின் ஒன்றரைகோடி ருபா செலவிலானஇவ்வீதியமைப்புபணி ஆரம்பித்துவைக்கப்பட்டது.

களுதாவளை வரலாற்றில் முதல்தடவையாக ஒரு கார்ப்பட் வீதியாகக்கருதப்படும் இப்பணி சமயஆசாரங்களுடன் விசேட பூஜையுடன் ஆரம்பமாகியது.

கொவிட் தாக்கத்திற்கு மத்தியிலும் இத்தகைய அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருவது குறித்து சமுக ஆர்வலர்கள் மேயர் பிரகாஷிற்கு பாராட்டுத்தெரிவித்துவருகின்றனர்.

அத்தருணம் மாத்தளை மாநகரசபை முதல்வர் மேயர் சந்தனம் பிரகாஷ் உறுப்பினர் த.மோகன் உள்ளிட்டோரும் தொடர்ச்சியாக



இச்செயற்றிட்டத்தை ஊக்குவித்துவருகின்றனர்.

# வரிச்சுமையின் வலிகளைத் தாங்க முடியாத நிலையில் வதைக்கப்படும் ஏழை மக்கள்
## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன்

(துறையூர் சஞ்சயன்)

இன்றைய நிலையில் அத்தியாவசியப் பொருட்கள் மீதான அரசின் வரி விதிப்புகளால் பொருட்களின் விலைகள் விசம் போல் ஏறியுள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கொரோனாத் தொற்றுகள், பயண முடக்கம், அவசர கால நிலைமை காரணமாக அன்றாடம் உழைத்து உண்ணும் மக்கள் தின வருவாய்களின்றி வேதனையின் விளிம்பில் வாழ்ந்து வருகிறார்கள். குடும்பத்திற்கு வழங்கும் இரண்டாயிரம் ரூபாய் நிவாரணத்துடன் ஏழை மக்களின் கஷ்டம் நீங்கி விட்டதாக அரசாங்கம் கருத முடியாது.

நாட்டின் மொத்தத் தேசிய வருவாயில் 50 வீதமான வருவாய் 20 வீதமான வசதி படைத்தவர்களுக்குச் சென்றடைகிறது. மீதியாகவுள்ள 50 வீத வருமானம் 80 வீதமான வசதி குறைந்த மக்களுக்குக் கிடைக்கிறது. அரசாங்கம் விதிக்கின்ற நேர்வரி பெரும்பாலும் வசதியான 50 வீதமானவர்களிடம் இருந்து பெறப்படுகிறது. ஆனால், ஏற்கனவே நேர்வரி விடயத்தில் வரிச்சலுகை அளிக்கப்பட்டுள்ளதால், 20 வீதமானவர்கள் அந்த வரி விலக்குச் சலுகைகளை அனுபவிக்கின்றனர்.

உதாரணமாக சீனி இறக்குமதி விடயத்தில் ஒரு கிலோகிராம் சீனிக்காக இருந்த 50 ரூபாய் வரியினை 25 சதமாக குறைத்தமையால் அரசுக்குக் கிடைக்க வேண்டிய கணிசமான நேர்வரி வருமானத் தொகை இழக்கப்பட்டுள்ளது. பெருந்தொகை நேர்வரி வருமானம் முதலீட்டாளர்களுக்கான விரிச்சலுகை என்ற அடிப்படையில் அரசாங்கம் இழந்துள்ளது. இதற்கு மாற்றீடாக அத்தியாவசியப் பொருட்கள் மீது நேரில் வரியினை அல்லது மறைமுக வரியினை விதிப்பதன் மூலமாக அரசு வருவாயினைப் பெற்றுக்கொள்ள முயற்சித்துள்ளது. இதனால் சாதாரண மக்கள் வரிச்சுமையின் வலியினைத் தாங்க வேண்டுமென அரசாங்கத்தினால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

அன்றாட வருவாய் இழந்து வெந்த புண்களாக வாழும் மக்களிடம் பொருட்களின் விலைவாசி ஏற்றத்தின் மூலமாகப் பெறப்படும் வரி விதித்தல் என்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலாகவேயுள்ளது. தேசிய வருமானத்தில் 50 வீத்தினைப் பெறும் 20 வீத மக்கள் வரிவிலக்குகள் மூலம் நன்மையடையும் அதே வேளை, 50 வீதமான தேசிய வருமானத்தினைப் பெறும் 80 வீதமான சாதாரண மக்கள் மறைமுக வரியின் மூலமாகப் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அரசாங்கம் உணர மறுத்துள்ளது.

மேட்டுக்குடிகள் மேலும் உயர்வதற்கும் சாதாரண மக்கள் மேன்மேலும், பொருளாதார மட்டத்தில் தாழ்ந்து போவதற்கும் இந்த மறைமுக வரி விதிப்புகள் வழி கோலியுள்ளன. அதே வேளை தற்போது இந்த அரசானது பல கோடிக் கணக்கான நோட்டுகளை அச்சிட்டுள்ளதாக அறிய முடிகிறது. ஆனால் பொருட்களின் உற்பத்திகள் குறைந்துள்ளன. தற்போது பணம் உள்ளது பொருட்கள் இல்லை, இதனால் பொருட்களின் விலைவாசி மேலும் உயர வாய்ப்புள்ளது.

அதாவது பணவீக்கம் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது. அரிதாக உள்ள உற்பத்திப் பொருட்களைப் பெறுவதற்காக அதிகளவான பணத்தினை மக்கள் செலவு செய்ய வேண்டியுள்ளது. இந்த நிலை சிம்பாவேக்கு ஒத்ததாக அமைந்துள்ளது. அங்கும் பண நோட்டுகளை அச்சிடுவதன் மூலமாக பொருளாதாரப் பிரச்சினைக்குக் தீர்வு காண்பதற்கு முற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், தற்போது 623 இறக்குமதிப் பொருட்கள் மீது அரசு இறக்குமதித் தடையினை விதித்துள்ளது. இந்த நிலை அரசின் கையிருப்பிலுள்ள டொலர் தட்டுப்பாட்டினை அதாவது அந்நியச் செலாவணி பற்றாக்குறையை வெளிக்காட்டுகிறது. சுற்றுலாப் பயணத்துறை பாரியளவில் வீழ்ச்சி அடைந்ததால் அந்நியச்செலாவணியையும் அரசாங்கம் இழந்துள்ளது. மக்களுக்குச் சலுகை நிவாரணம் அளிக்கவுள்ளதாகக் கூறிய அரசாங்கம் கோடீஸ்வரர்கள், செல்வந்தர்களுக்கே வரிச்சலுகை அளித்துள்ளது.

எனவே, இந்த அரசாங்கத்தின் வாக்குறுதிகள் புஷ்வாணங்களாக மாறியுள்ளன. மக்கள் ஏமாற்றம் அடைந்து நிற்கிறார்கள். தமது எதிர்ப்பைக் காட்ட முடியாதளவுக்கு கொரோனாத்தடைகள், அவசர கால நிலைமைகள் காணப்படுகின்றன. இராணுவத் தந்திரங்கள் போருக்கு உதவலாம். இராஜதந்திரங்கள், யதார்த்த சிந்தனைகளே நாட்டைக் கட்டியெழுப்ப உதவும், வறுமைகளைப் போக்க உதவும்.

இராணுவ மயமாக்கல், அடக்குமுறைகள், தேசியப் பிரச்சினைகளையோ அன்றாடப் பிரச்சினைகளையோ தீர்க்க உதவாது என்பதே வரலாறு கற்றுத் தந்த பாடம் என்பதை அரசாங்கம் மறந்துவிட்டது. மக்களின் அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை இல்லாமல் செய்வதற்கு அவசரகாலச்சட்டம் உதவலாம். ஆனால் மக்களின் உளவியல் ரீதியான எதிர்ப்புகளை அவசரகால அடக்குமுறை அதிகரிக்கவே செய்யும் என்றார்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com



SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


Call us now!
0791023193
0787437071
MON-FRI
11.30 - 23.30
SATURDAY
11.30 - 23.00
SUNDAY
11.30 - 18.00
GRUNAU 1
ASIAN FOOD
RESTAURANT
STARTER
BBQ
GRILL-TANDOORI
SPECIAL NAAN
MIX SABJI
BIRIYANI SPL
CURRY DISHES
FISH SPL
DESERTS - ICE CREAM
COFFEE SPL
CALL WE DELIVER YOU - STAY HOME STAY SAFE
MEIERWISSENSTR 588064 ZURICH







# அஷ்ரப் எனும் அரசியல் ஆளுமை

**கிழக்கு** மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சம்மாந்துறையில் முஹம்மத் ஹுசைன் விதானை, மதீனா உம்மாஹ் தம்பதியின் மகனாக 1948 ஒக்டோபர் 23 ஆம் திகதி ஒரேமகனாக மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் பிறந்தார்.

தனது ஆரம்பக்கல்வியை கல்முனை அல்அஸ்ஹர் வித்தியாலயத்திலும், பின்னர் இடைநிலைக்கல்வியை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி, கல்முனை உவெஸ்லி பாடசாலை, அலெக்ஸாண்ட்ரியா கல்லூரியிலும் கற்ற முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப். பின்னர் 1975 ஆம் ஆண்டு அரச சட்டத்தரணியாக நியமனம் பெற்றார். பின் சட்டமாணி, சட்ட முதுமாணிப் பட்டங்களை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார். 1995 இல் அமைச்சராக இருக்கும் போதே சட்டமுதுமாணிப் பட்டத்தைப் பெற்ற இவர், 1997 இல் ஜனாதிபதி சட்டத்தரணியானார்.

பேரியல் இஸ்மாயில் என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட மர்ஹூம் அஷ்ரபுக்கு அமான் அஷ்ரப் எனும் ஓர் ஆண் மகனும் உண்டு.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப், தனது அரசியல் வாழ்வை ஈழத்தின் தந்தை என்றழைக்கப்படும் தந்தை செல்வாவை முன்மாதிரியாகக் கொண்டு ஆரம்பித்தார்.


1976 இல் பொலிஸாரினால் புத்தளம் பள்ளிவாசலில் கொல்லப்பட்ட முஸ்லிம் மக்கள் பற்றி, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விஷயத்தில் மௌனம் சாதித்த போது, இது பற்றிப் பேசிய ஒரேயொருவரான தந்தை செல்வாவை மர்ஹூம் அஷ்ரப் வியந்து பாராட்டிப் பேசினார்.

19%% இல் தந்தை செல்வநாயகத்தின் மறைவுக்குப் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியை வழிநடாத்தும் பொறுப்பை அ.அமிர்தலிங்கம் ஏற்றார். இவர், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முஸ்லிம் ஐக்கிய முன்னணியை (MULF) ஆரம்பித்து, அ. அமிர்தலிங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்தார். தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் மேடைகளில் அ.அமிர்தலிங்கத்துடன் இணைந்த முன்னாள் அமைச்சர் மர்ஹூம் அஷ்ரப், தமிழ் ஈழமுக்காக வேகத்துடன் பிரசார செயற்பாடுகளில் ஈடுபட்டார். இவ்வேளையில்தான் ‘அண்ணன் அமிர்தலிங்கம் தமிழ் ஈழமை அமைக்க முடியாமல் போனால், தம்பி அஷ்ரப் அதைச் செய்வான்’ என பகிரங்கமாக அறிவித்தார்.

பின்னர் 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் கல்முனை, சம்மாந்துறை, புத்தளம், மூதூர் ஆகிய இடங்களில் முஸ்லிம் வேட்பாளர்கள் ‘சூரியன்’ சின்னத்தில் களமிறக்கப்பட்டனர். இதில் மர்ஹூம் அஷ்ரப் போட்டியிடவில்லை. இத்தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தமிழ் வேட்பாளர்கள் அமோக வெற்றி பெற்று, நாட்டின் வரலாற்றில் தமிழ்க்கட்சி ஒன்று இரண்டாவது அதிகூடிய ஆசனங்களைப் பெற்றது. ஆயினும், இந்தக் கட்சியில் போட்டியிட்ட முஸ்லிம்கள் எவரும் வெற்றி பெறவில்லை.

தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை வேறு கோணத்தில் மர்ஹூம் அஷ்ரப் உற்று நோக்கினார். அஷ்ரபினுடைய தமிழ் ஈழத்தின் மீதான விருப்பம் மற்றும் தமிழ், முஸ்லிம் அரசியல் இலட்சியத்தை பகிர்ந்து கொள்ளும் விருப்பத்துக்கு அப்பால் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் வேறு அபிலாஷைகளைக் கொண்டிருக்கின்றனர் என்பதை அவர் உணர்ந்தார்.

1981 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் தமிழர்களை மட்டும் போட்டியிட வைத்தது. அத்தேர்தலில் முஸ்லிம்களை இணைக்க மர்ஹூம் அஷ்ரப்



முன்வைத்த கோரிக்கை மறுக்கப்பட்டது. இதனால், மர்ஹூம் அஷ்ரப் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியிலிருந்து முற்றாக விலகி, தனித்துச் செல்ல தீர்மானித்தார்.

தமிழ், சிங்கள அரசியலிலிருந்து வேறுபட்ட சுயாதீனமான அரசியல் தேவைப்பாடு முஸ்லிம்களுக்கு அவசியம் என்பதை உணர்ந்த மர்ஹூம் அஷ்ரப், அஹமட்லெப்பையுடன் கூட்டுச் சேர்ந்து, 1981 செப்டம்பர் 21 இல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் புதிய கட்சியை காத்தான்குடியில் ஆரம்பித்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, ஆரம்பத்தில் அரசியல் பிரச்சினைகளை விட, அதிகமாக சமூக கலாசார விடயங்களில் அக்கறை கொண்ட கிழக்கு மாகாண அமைப்பாகவே செயற்பட்டது.

1985ஆம் ஆண்டு கல்முனை காரைதீவு, தமிழ் - முஸ்லிம் இனமுரண்பாடுகள் மர்ஹூம் அஷ்ரபை பாதித்தனால் கொழும்பு நோக்கி குடிபெயர்ந்தார். இந்த கொழும்பு நோக்கிய நகர்வு அவரது அரசியலின் மைல்கல்லாக அமைந்தது. இவரது அரசியல் முயற்சிகளுக்கு ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர்முஸ்தபா அடங்கலாக முஸ்லிம்கள் பலர் ஒத்துழைப்பு நல்கினர். இவ்வேளையிலே அஷ்ரபின் அறிமுகம் ஹக்கீமுக்கு



ஏற்பட்டது. கிழக்குக்கு அப்பாலும் முஸ்லிம் காங்கிரஸ் விரிந்து செல்ல வேண்டிய தேவைப்பாட்டை இனங்கண்ட மர்ஹூம் அஷ்ரப், 1986 ஆம் ஆண்டு நவம்பர் 29 இல் புஞ்சிபொரளையில் நாடளாவிய ரீதியில் கட்சி மாநாடொன்றைக் கூட்டி, முஸ்லிம் காங்கிரஸின் கட்சித் தலைமைப் பொறுப்பை அஹமத்லெப்பையிடம் இருந்து பொறுப்பேற்ற மர்ஹூம் அஷ்ரப், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை அகில இலங்கை ரீதியிலான கட்சியாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து, கட்சியின் நோக்கங்களை மீளமைத்து யாப்பை திருத்தி எழுதி, 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 இல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மரச்சின்னத்துடன் தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக பிரகடனப்படுத்தப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், 1988 இல் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலில் களமிறங்கியது. இத்தேர்தலில் வடக்கு - கிழக்கில் 17 இடங்களையும், மேற்கு, வட மேற்கு, மத்திய, தென் மாகாணங்களில் 12 இடங்களையும் கைப்பற்றியது. வட கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் முறையே 9,3,5 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. புதிதாக உருவாக்கப்பட்ட இக்கட்சியின் அமோக வெற்றி மூலம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அடுத்த கட்ட நகர்வுகளுக்கு பெரும் உந்துசக்தி அளித்தது. முதலமைச்சர் வரதராஜ பெருமாளின் தலைமையிலான வட கிழக்கு மாகாணசபை நிர்வாகத்திற்கு பிரதான எதிர்க்கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி விளங்கியது.

பின்னர் 1988 இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய ஆர். பிரேமதாஸவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரித்தது. அதன் பின்னர், 1989 இல் இடம்பெற்ற பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டு, மாவட்ட ரீதியாக மூன்று ஆசனங்களும் தேசியப்பட்டியல் ஆசனம் ஒன்றுமாக நான்கு ஆசனங்களைப் பெற்றது. இதில், அம்பாறை மாவட்டத்தில் இருந்து மர்ஹூம் அஷ்ரப், மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து ஹிஸ்புல்லாஹ், வன்னியில் இருந்து அபூபக்கரும் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர். பாராளுமன்றத்தில் மும்மொழிப் பேச்சுத் திறனாலும், துணிச்சலும் நிறைந்த உரைகளால் அனைவரினதும் கவனத்தை ஈர்த்தார் மர்ஹூம் அஷ்ரப்.

அவரது வாழ்வில் நடந்த சுவாரஷ்யமான நிகழ்வுகளில் ஒன்று அதாவது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மூலம் பாராளுமன்றத்துக்கு முதன் முதலாகத் தெரிவாகி, அங்கு உரையாற்ற சந்தர்ப்பம் கிடைத்த போது, பேச ஆரம்பித்த மர்ஹூம் அஷ்ரப், ‘பாராளுமன்ற வரலாற்றில் முதற் தடவையாக இந்த உயர்ந்த சபையிலே உரையாற்ற வாய்ப்புக் கிடைத்த முதல் முஸ்லிம்...’ என்று பேச ஆரம்பித்த போது பாராளுமன்றத்தில் உள்ள ஏனைய முஸ்லிம் தலைவர்கள் கூச்சலிட்டு பேச முடியாதளவு தடுத்தனர். அப்போது சபாநாயகராக இருந்த மர்ஹூம் எம்.எச் முஹம்மத், சபையை அமைதிப்படுத்தி, மீண்டும் பேச வாய்ப்பளித்தார். அப்போதும் அஷ்ரப், ‘முன்பு சொன்னது போன்று பேச, திரும்பவும் கூச்சலிட்டனர். அப்போது குறுக்கிட்ட சபாநாயகர், ‘அவர் என்னதான் சொல்கிறார் என்று பார்ப்போம். அவரைப் பேச விடுங்கள்’ என்று கூறிய போது, அஷ்ரப் மீண்டும் பேச ஆரம்பித்தார். ‘பாராளுமன்ற வரலாற்றில் முதற் தடவையாக இந்த உயர்ந்த சபையிலே உரையாற்ற வாய்ப்புக் கிடைத்த முதல் முஸ்லிம் கட்சித் தலைவர் என்ற வகையில் நான் இறைவனுக்கு நன்றி தெரிவிக்கிறேன்’என்று கூறிய போது அனைவரும் வாயடைத்துப் போயினர். சபையும் அமைதியானது. அந்தவேளையில் ஐ.தே.க., ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற தேசிய கட்சிகள் மூலம்தான் முஸ்லிம்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகினர். சபையில் அனைவரும் மர்ஹூம் அஷ்ரப் முதல் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்





என்று கூறப்போகிறார் என்றே கூச்சலிட்டனர். மிகுந்த சாணக்கியமும் சமர்த்தியமும் ஆற்றலும் மும்மொழி புலமையும் மிக்கவர்தான் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்.

1993 ஆம் ஆண்டு இடம்பெற்ற மே தின ஊர்வலத்தில் ஜனாதிபதி பிரேமதாச உயிரிழந்தார். இதன் காரணமாக 1994இல் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற இருந்த நிலையில், அஷ்ரப் சந்திரிக்காவுடன் 1994 இல் ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டார். இத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு - கிழக்கில் செ ாந்த சின்னத்திலும், வேறு மாகாணங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து அக்கட்சியினுடைய சின்னத்திலும் போட்டியிட்டது.

இத்தேர்தலில் பொது ஜன முன்னணி 105 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 94 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 6 தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களையும், ஒரு தேசியப்பட்டியல் அங்கத்தவரையும் பெற்றது. இத்தேர்தல் மூலமாகவே ரவுப் ஹகீம் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தை நிறுவுவதில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேரம் பேசும் சக்தியாக விளங்கியது. மர்ஹூம் அஷ்ரப் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து புனர்வாழ்வு அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஹிஸ்புல்லாவும், அபூபக்கரும் பிரதியமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். ரவூப்ஹக்கீம் குழுக்களின் தவிச



ாளராக நியமனம் செய்யப்பட்டார். மர்ஹூம் அஷ்ரப் இளைஞர்களுக்கு துறைமுக அதிகார சபையிலும் பல்வேறு திணைக்களங்களிலும் வேலைவாய்ப்புக்களை வழங்கினார்.

அரசியல் மட்டுமல்லது, கவிஞர், எழுத்தாளர் எனப் பன்முக ஆளுமை கொண்ட இவர், ‘நான் எனும் நீ’ எனும் கவிதை நூலையும் எழுதி, அதனை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், இந்தியாவில் இருந்து கவிக்கோ அப்துல் ரஹ்மானை அழைத்து வெளியிட்டார். அவருக்கு பொற்கிழி, பொன்னாடை வழங்கிக் கௌரவித்தார். அந்த நேரத்தில் அவரது நூலே கவிதை நூல்களிலே மிகப் பெரிய நூலாகக் காணப்பட்டது. அந்நூலில் அவரது மரணம் பற்றிய கவிதை எழுதப்பட்டிருந்தது குறித்து அவரது மறைவுக்குப் பிறகு பலரும் சிலாகித்துப் பேசியமை குறிப்பிடத்தக்கது.

பெருந்தலைவர் மர்ஹூம் அஷ்ரப், சாதாரண மனிதன் முதல் உயர்ந்த இடத்திலுள்ளோர் என யார் வந்து நூல் விழாவுக்கு அழைத்தாலும் செல்வார். சன்மானமும் வழங்குவார். அவ் விழாவில் உரையாற்றும் போது அரசியல் பேசமாட்டார்.



நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் யாழ்ப்பாணத்தில் உள்ள பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்கு முஸ்லிம் மாணவர்கள் தயங்கினர். இதேபோல தமிழ் முஸ்லிம் சமூகத்திற்கிடையில் உருவான பிணக்குகளும் கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்தும் மாணவர்கள் வெளியேறுவதற்கு காரணமாக அமைந்தது. இதனை உணர்ந்த முன்னாள் அமைச்சர் மர்ஹூம் அஷ்ரப், ஒலுவில் பிரதேசத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கான நடவக்கைகளை முன்னெடுத்தார். பல்வேறு எதிர்ப்புக்கு மத்தியில் 1995 ஒக்டோபர் 23 இல் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை நிறுவினார்.



தற்போது இலங்கையின் ஒரு முன்னணிப் பல்கலைக்கழகமாக தென்கிழக்குப் பல்கலைக்கழகம் திகழ்கின்றது. இதன் இன்னுமொரு மைல்கல் என்னவென்றால், இப்பல்கலைக்கழகத்திலே கற்று, அங்கேயே பேராசிரியராகி, தற்போது அப்பல்கலைக்கழகத்திலே உபவேந்தராக, பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இவரது இந்த நியமனம் மூலம் மர்ஹூம் அஷ்ரபின் கனவு நனவாகியுள்ளது என்பதே குறிப்பிடத்தக்க விடயமாகும்.

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப், இலங்கையிலுள்ள வெவ்வேறு இன மக்களுக்கிடையே ஒற்றுமையை உருவாக்கி, தேசிய நீரோட்டத்தில் அரசியல் பயணத்தைக் கொண்டு செல்வதற்காக 1998இல் மற்றுமொரு அரசியல் கூட்டணியை நிறுவ, கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். இக்கட்சியானது தேசிய ஐக்கிய கூட்டமைப்பு எனும் பெயரில் புறாச் சின்னத்துடன் தேர்தல் ஆணையளரினால் 1999 ஆகஸ்ட் 23 இல் பதிவு செய்யப்பட்டது. ‘ஒவ்வொரு குடிமகனும் இலங்கைத் தாய்நாட்டுக்குத் தேவை. எல்லா குடிமகன்களுக்கும் தேவை ஒரே இலங்கை’ எனும் தொனிப்பொருளில் 2012 இல் ஒற்றுமை நிறைந்த இலங்கையை உருவாக்குவதாக இருந்தது. ஆயினும், அஷ்ரபின் மரணத்திற்குப் பின்னர் ஹக்கீம், பேரியல் ஆகிய இருவருக்குமிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக அது இடம் பெறவில்லை.

2000ஆம் ஆண்டு இடம்பெறவிருந்த பாராளுமன்றத் தேர்தல் பிரசாரத்திற்காக இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான எம்.ஐ 17 ரக ஹெலிக்கொப்டரில் செப்டம்பர் 16 அன்று அம்பாறை நோக்கி பயணித்த போது, கேகாலை மாவட்டத்தில் அரநாயக்க பகுதியில் வைத்து விமானம் விபத்துக்குள்ளானதில் எம்.எச்.எம்.அஷ்ரப் உயிரிழந்தார். பயணித்த அனைவரும் அதில் உயிரிழந்தனர்.

‘மர்ஹூம் அஷ்ரப் பற்றிய நூல்கள் குறைந்தது பத்து நூல்களாவது வெளிவந்திருக்க வேண்டும். ஆனால், அவரது மறைவுக்குப் பின் ஒரு நூல் கூட இதுவரை வெளிவரவில்லை. இதனை அவரது கட்சியோ, கட்சி அங்கத்தவர்களோ, அவரது குடும்ப உறுப்பினர்களோ கட்டாயம் செய்திருக்க வேண்டும். யாருமே அக்கறை எடுத்துச் செய்யவில்லை. அனைவரும் அலட்சியமாக இருக்கின்றனர். அஷ்ரபைப் பற்றி அறிய வேண்டுமானால் அவர் எழுதிய ‘நான் எனும் நீ’ எனும் கவிதை நூல் மட்டுமே உள்ளது. எனவே, அவரது பாராளுமன்ற உரைகள், அவரது பொக்கிஷங்கள் போன்றவை அச்சுப் பதிப்பாக வெளிவரவேண்டும். அப்போதுதான் எதிர்கால சந்ததியினர் அவரைப் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். இனியாவது இச் செயற்பாட்டை முன்னெடுப்பார்களா?’

அஷ்ரப் மறைந்த செய்தி அறிந்து நாடே சோகத்தில் ஆழ்ந்தது. அவரது இறுதி ஊர்வலத்தில் இன, மத, சாதி பாராது அனைத்து மக்களும் கலந்து கொண்டமை ஏனைய இனத்தவர்களும் அவர் மீது வைத்திருந்த அன்பு மற்றும் மரியாதையை பறைசாற்றியது.

முஸ்லிம் சமூகத்துக்கு மாத்திரமல்லாமல் இலங்கையின் அனைத்து மக்களுக்கும் அரும்பணியாற்றியுள்ள அன்னாரின் இழப்பு நாட்டு மக்களுக்கு ஈடு செய்யமுடியாததொரு பேரிழப்பாகும். அன்னாருக்கு உயர்ந்த சுவர்க்கமான ஜென்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கம் வழங்க வல்ல இறைவன் துணை புரிவானாக!

எம்.எஸ்.எம்.ஸாகிர்




# கிண்ணியா நடு ஊற்று மழை நீர் வடிந்தோடும் போக்கை திறந்து விடுமாறு கோரிக்கை

(இஃஜாஸ் ஏ பரீட்)

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் நடுஊற்று பிரதான வீதி பகுதியில் தனி நபர் ஒருவர் மழை நீர் வடிந்து ஓடும் போக்கு ஒன்றை மறித்து அடைத்து வைத்துள்ளதாக பிரதேச மக்கள் புகார் அளிக்கின்றனர்.

இந்த வீதி ஒரு நடு ஊற்று நாற்சந்தி பிரதான வீதியாகும். இப்பகுதியில் வைத்திய சாலை, நேசரி பாடசாலை, அபிவிருத்தி உத்தியோகத்தர் காரியாலயம், நெசவு நிலையம் என்பன காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பிரதேச மக்கள் கடந்த மாதம் 2021/08/12 திகதி நடுஊற்று அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் , கடந்த 2021/08/14 திகதி நடுஊற்று கிராம உத்தியோகத்தருக்கும் 2021/08/13 திகதியும் 16,1%ம் திகதியும் கிண்ணியா பிரதேச சபை தவிசாளரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மீண்டும் பிரதேச செயலக கிராம சேவை உத்தியோகத்தரிடம் இது குறித்த 2021/09/12ம் திகதியும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அனைத்து அதிகாரிகளுக்கும் எடுத்துக் கூறியும் இது வரை தனி நபர் ஒருவர் அடைத்த மழை நீர் வடிந்தோடும் போக்கை அகட்டவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

இது வரைக்கும் குறித்த நபருக்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை ஏன்? என் கோருகின்றனர்.

இந்த தனி நபர் இதற்கு முன்னரும் இந்த வடிந்தோடும் போக்கை மறித்து வைத்ததை மூன்று முறை கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம அபிருத்தி உத்தியோகத்தர் அனைவரும் திறந்து விடப்பட்டதாகவும்

மீண்டும் இவர் அடைத்து வருவதால் மக்களுக்கு பொது பிரச்சினை ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக குறித்த அதிகாரிகள் உடன் சீர் செய்து தருமாறு நடுஊற்று கிராம அபிவிருத்தி சங்கம் சார்பாகவும் மக்கள் சார்பாகவும் கிராம அபிவிருத்தி சங்கத்தின தலைவர் பைஸர் இஸ்மாயில் தெரிவித்தார்.

# கொட்டும் மழைக்கு மத்தியில் தடுப்பூசி ஏற்றல் வீடு வீடாக தொடர்கிறது



(காரைதீவு நிருபர்)

கொட்டும் மழைக்கு மத்தியில் மாத்தளை மாநகரசபையின் ஏற்பாட்டில் மாநகரசபையின் சுகாதாரப்பிரிவினரால் மாநகரிலுள்ள 60வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நேற்று தடுப்பூசி ஏற்றப்பட்டது.

தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்கு வரமுடியாதுபோன வயோதிபர்கள் நோயாளிகள் போன்றோருக்கு மலைகளில் ஏறி இறங்கி வீடு வீடாக இத்தடுப்பூசி ஏற்றல் இடம்பெற்றது. மாத்தளை மாநகரசபை முதல்வர் மேயர் சந்தனம் பிரகாஷ் தலைமையில் மாநகரசபை வைத்திய அதிகாரி டாக்டர். அனுஷ வெலகெதர தலைமையிலான குழுவினர் இச்சிறப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி ஏலவே ஏற்றப்பட்டு நிறைவடைந்த கையோடு இவ்வேலைத்திட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. அத்தருணம் மாத்தளை மாநகரசபை முதல்வர் மேயர் சந்தனம் பிரகாஷ் உறுப்பினர் த.மோகன் உள்ளிட்டோரும் தொடர்ச்சியாக தடுப்பூசி போடும் இச்செயற்றிட்டத்தை ஊக்குவித்துவருகின்றனர்.

# மண்முனை வடக்கு பொது மக்களுக்கான அறிவித்தல்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

30 தொடக்கம் 60 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கான தடுப்பூசியை இதுவரை பெறத்தவறியவர்களுக்கான சந்தர்ப்பத்தினை வழங்குவதற்காக எதிர்வரும் 15, 16, மற்றும் 17ம் திகதிகளில் பின்வரும் நிலையங்களில் தடுப்பூசியை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1. தொழில்நுட்ப கல்லூரி, மஞ்சந்தொடுவாய்
2. சிவானந்தா தேசிய பாடசாலை
3. மாநகர மண்டபம், திசவீரசிங்கம் சதுரக்கம்
4. கொக்குவில் விக்னேஷ்வரா வித்தியாலயம்

மேலே குறிப்பிடப்பட்ட இடங்களில் பொருத்தமான இடத்திற்கு சென்று எதிர்வரும் 15, 16, மற்றும் 17ம் திகதிகளில் தடுப்பூசியை பெறுமாறு மண்முனை வடக்கு பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# நுவரெலியா மாவட்டத்தில் இதுவரை 455 கொரோனா மரணங்கள் பதிவு

தலவாக்கலை பி.கேதீஸ்

நுவரெலியா மாவட்டத்தில் இதுவரையில் 12778 பேர் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். 455 பேர் உயிரிழந்துள்ளனர். 24 மணி நேரத்தில் 26 பேர் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். நுவரெலியா மாவட்டத்தின் கொரோனா தொற்று தொடர்பாக 14.9.2021 மாலை வெளியான அறிக்கையின்படி 12778 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. இவர்களில் 455 பேர் மரணமடைந்துள்ளனர்.

8287 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 14.9.2021 வரையான 24 மணித்தியாலயத்தில் 26 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளதாகவும் 45 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

அம்பகமுவ பகுதியில் 2314 குடும்பங்களும் கொத்மலை பகுதியில் 1365 குடும்பங்களும் ஹங்குரன்கெத்த பகுதியில் 1216 குடும்பங்களும் வலப்பனை பகுதியில் 1403 குடும்பங்களும் நுவரெலியாவில் 1989 குடும்பங்களுமாக மொத்தமாக 828% குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொரோனா தொற்று உறுதியானவர்களில் அதிகமானவர்கள் அம்பகமுவ பகுதியிலுள்ளவர்கள் 2046 பேரும் பொகவந்தலாவ பகுதியில் 1184 பேரும் ஹங்குரன்கெத்த பகுதியில் 601 பேரும் கொட்டகலை பகுதியில் 918 பேரும் கொத்மலையில் 1032 பேரும் லிந்துலையில் 1109 பேரும் மஸ்கெலியா 794 பேரும் மதுரட்ட பகுதியில் 249 பேரும் நுவரெலியா மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்களில் 686 பேரும் புதிய திஸ்பனை பகுதியில் 1018 பேரும் நுவரெலியாவில் 1640 பேரும் இராகலையில் 789 பேரும் வலப்பனை பகுதியில் 712 பேருமாக மொத்தமாக 12778 பேர் பி.சி.ஆர் பரிசோதனையின் மூலமாக தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்கள் அதிகம் இனம் காணப்பட்ட பிரதேசமாக அம்பகமுவ பிரதேசம் காணப்படுகின்றது. இங்கு 2046 பேர் இனம் காணப்பட்டுள்ளதுடன். இதுவரையில் நுவரெலியா மாவட்டத்தில் 455 பேர் உயிரிழந்துள்ளதுடன். அதில் அதிகமானவர்கள் அம்பகமுவ பகுதியிலேயே உயிரிழந்துள்ளனர். 140 பேர் உயிரிழந்துள்ளனர். இது தவிர நுவரெலியா பகுதியில் 139 பேரும் வலப்பனை பகுதியில் 64 பேரும் கொத்மலையில் 68 பேரும் ஹங்குரன்கெத்த பகுதியில் 44 பேருமாக 455 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த 24 மணித்தியாலத்தில் அதாவது இந்த அறிக்கை வெளியான (14.09.2021) அன்று மாலை 4 மணி வரை நுவரெலியா பகுதியிலேயே அதிகமான தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். 09 பேர் இனம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பட்டதாரி பயிலுனர்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றவும்

## இம்ரான் எம்.பி

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



2020 ம் ஆண்டு பட்டதாரி பயிலுனர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளை உடன் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் (14)அவரது அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்

ஒரு வருடத்துக்கு பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படுவதாக கூறப்பட்ட போதிலும் மேலும் ஆறு மாதங்கள் நீடித்திருப்பது பட்டதாரிகளுக்கு கஷ்டத்தை ஏற்படுத்தும் அவர்களுக்கான கொடுப்பனவு தற்போது 20 ஆயிரம் ரூபாவே வழங்கப்படுகிறது இதனையும் நேர காலத்தோடு சில செயலகங்களில் வழங்கப்படுவதில்லை 10ம் திகதிக்குள் வழங்க வேண்டும் என்ற நிலை இருந்தாலும் கால நீடிப்புச் செய்வதுமாக இருக்கிறது தற்போதை நிலையில் நிரந்தர நியமனத்தை குறைந்தது மூன்று மாதமாவது நீடித்து வழங்க வேண்டும்

நாட்டின் நிலை அதிர்ப்திக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அத்தியவசிய பொருட்கள் என்ற பெயரில் சுமாரில் 600 க்கு மேற்பட்ட பொருட்களுக்கு விலை உயர்ந்து 77களில் போன்று பஞ்ச நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் விரும்பிய பொருட்களை வாங்க முடியாத நிலையும் மக்களை பல கஷ்டங்களுக்கு தள்ளியுள்ளது .ஐக்கிய நாட்டின் 48 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை பற்றி முதலாவதாக பேசப்பட்டுள்ளதுடன் பேசு பொருளாகவும் மாறியுள்ளது.

இதில் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புள்ளா துமிந்த சில்வாவின் விடுதலை பற்றி பேசப்பட்டாலும் நாட்டின் பொருளாதார தடை ஏற்படாத வண்ணம் நிலைமை மோசமாகுவதை தடுக்க வழி செய்ய வேண்டும். இலங்கை முஸ்லிம்களுக்கான சட்டமாக ஹாதி நீதிமன்றத்தை ஒழிப்பது என்பதையும் ஏற்க முடியாது ஆங்கிலேயர் ஒல்லாந்தர் காலங்களில் கூட இச் சட்டம் இருந்தது காலத்துக்கு காலம் சட்டத்தை மாற்றினாலும் அதனை ஒழிக்க முறபடக்கூடாது

1952 களில் இச் சட்டம் ஆரம்பம் தொட்டு உள்ளது ஹாதி நீதிமன்றங்களை ஒழித்து ஏனைய நீதிமன்றங்களில் விவாக விவாகரத்து விடயங்களை பார்ப்பதென்பது ஏற்றுக் கொள்ள முடியாது இலங்கை நீதிமன்றங்களில் 2020 டிசம்பர் வரை 8 இலட்சம் வழக்குகள் நிலுவையில் இருக்கிறது இவ்வாறு இருக்க இந்த சட்டத்தில் கைவைப்பது அரசாங்கம் செய்யும் வரலாற்றுத் துரோகம் ஆகும். அரசினால் வழங்கப்பட்ட 2000 ரூபா கொரோனா கொடுப்பனவு எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட்டது இது சரியான முறையில் வழங்கப்படவில்லை 1008 வழி முறைகளை வைத்து இதனை மக்களுக்கு சென்றடைய செய்யவில்லை அரச ஊழியர்களின் சம்பளத்தை பெறுவது தொடர்பாக பேசப்பட்ட அத்தனையும் மக்கள் மத்தியில் அதிர்ப்தியை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

# இலண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை மீளுருவாக்கம் செய்ய தமிழக அரசுக்கு கோரிக்கை

(வி.ரி.சகாதேவராஜா, பாறுக் ஷிஹான் )




இலண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை மீளுருவாக்கம் செய்ய தமிழக அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தில் மாண்புமிகு முதல்வர் திரு. மு. க. ஸ்டாலின் இலண்டன் பல்கலைக்கழகத்தில் குஙீ அகு மூலம் தமிழ் பல்கலைபடிப்புகள் நடத்திட தமிழ்துறை மீளுருவாக்கம் செய்திட வேண்டும் எனக் கோரிக்கை வைக்கப்பட்டது.

ஊடகத்துறையினரைச் சந்தித்துப் பேசிய இந்நிகழ்வில்

ஆபிரகாம் பண்டிதரின் கொள்ளுப்பெயர்த்தியும், ஐக்கிய இராச்சியத் தமிழ்த்துறையின் துணைப்பொருளாளருமான முனைவர். பொன்னம்மாள், முனைவர். கனகலட்சுமி, முனைவர் பா. இறையரசன், திரு. தமிழ் பாரதன், திரை இயக்குநர் ஹரி உத்ரா, கவிஞர் மறத்தமிழ் வேந்தன், இதழாளர் ரியாஸ், மூத்த பத்திரிகையாளர் இரவி குணவதி மைந்தன் முதலியோர் கலந்து கொண்டனர்.

இலண்டன் பல்கலைக் கழகத்தில் தென்கிழக்காசிய ஆப்பிரிக்கப் பள்ளியில் நடைபெற்று வந்த தமிழ்த்துறை 1916 முதல் 1996 வரை இயங்கி, நிதி பற்றாக்குறையால் மூடப்பட்டுள்ளது. இலண்டன் பல்கலைக்கழக தமிழ்த்துறையை முழுதாக மீட்டுருவாக்கம் 100 கோடி ரூபாய் தேவைப்படுகிற நிலையில், தமிழக அரசு குறைந்தது 25 கோடியாவது நிதிநல்க வேண்டும் என்று முனைவர் பொன்னம்மாள் கேட்டுக்கொண்டார். மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்கள் ஏற்கனவே இலண்டன் பல்கலைக்கழகம் SOAS க்கு சென்றுள்ளார் என்பதும், வங்காள மொழி வளர்ச்சிக்கு 5 கோடி நிதி உதவியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜி.யூ.போப் அவர்கள் 1885 இல் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்றுக் கொடுத்துள்ளார். தமிழகம் வந்த ஜியூ போப் மாநிலக்கல்லூரியில் பணியாற்றியதுடன் திருக்குறள், திருவாசகம் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

தென் ஆப்பிரிக்கத் தமிழர்கள் அப்போது நிதி உதவினர். இப்போது உலகத்தமிழர்கள் ஒன்றரை கோடி திரட்டி உதவியுள்ளனர். இந்த நிலையில், தமிழக அரசும் உதவி புரிந்து, மூடப்பட்ட தமிழ்த்துறையை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும் என்று முனைவர் பா.இறையரசன் கூறினார்.

இலண்டன் பல்கலைக்கழகத்தில் உள்ள தமிழ் ஓலைச் சுவடிகள் பற்றி பத்திரிக்கையாளர்கள் வினா எழுப்பினர். அவை தமிழ்த்துறை தொடங்கப்பெற்றவுடன் ஆய்வு செய்யப்பெறும் என்று பதிலளிக்கப்பட்டது.

அடிப்படைக் கல்வி முதல் ஆய்வுப் படிப்பு வரை அனைவரும் படிக்கவும் உலகெங்கும் தமிழைப் பரப்ப வேண்டும் எனும் ஒரே நோக்கோடு தமிழ்த்துறை அமைக்கப் படுகிறது மேலும் தமிழில் உயர்கல்வி படிக்க வேண்டுமென்றால் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் தான் வரவேண்டும் தமிழ்த் துறை அமைத்தால் அங்கேயே படித்துக் கொள்ளும் சூழல் ஏற்படும் என்பதைக் குறித்து முனைவர் கனகலட்சுமி பேசினார்.

ஐக்கிய இராச்சியத் தமிழ்த்துறை (TamilStudiesUK) சார்பாக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இன்று காலை செய்தியாளர் சந்திப்பு நடத்தயடுத்து, மாலை 7.30 மணியளவில் முனைவர் பொன்னம்மாள் அவர்கள் அண்ணா அறிவாலயத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து, இலண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை மீளுருவாக்கம் செய்ய கோரிக்கை கடிதம் கொடுத்துள்ளார்.

# மூவின மக்களால் மதிக்கப்பட்டவரே டாக்டர் எஸ்.கதிர்காமத்தம்பி

## 21 ஆவது நினைவையொட்டி பிரசுரமாகின்றது





(துறையூர் சஞ்சயன்)

2000 ஆம் ஆண்டு ஒன்பதாம் மாதம் 16 ஆம் திகதி முன்னாள் அமைச்சர் மர்ஹூம் அஷ்ரப் அவர்களுடன் கொழும்பில் இருந்து அம்பாறைக்கு விமானத்தில் பயணித்த வேளையில் அகால மரணமடைந்த டாக்டர் எஸ் கதிர்காமத்தம்பி, ஆரம்பகாலம் தொட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியில் முன்னணி ஊழியராக தன்னை அறிமுகப்படுத்தி, தமிழரசுக் கட்சித் தந்தை செல்வநாயகத்தோடு இணைந்து இலங்கை தமிழரசுக் கட்சியை அம்பாறை மாவட்டத்தில் பலபடுத்தினார்.

தனது, ஆரம்பக்கல்வியை சம்மாந்துறை முஸ்லிம் தேசிய பாடசாலையில் கல்வி கற்றதனால் பல முஸ்லிம் நண்பர்களையும் தன்னுடன் இணைத்துக்கொண்டு ஆரம்ப கால அரசியலை சம்மாந்துறை மண்ணில் இருந்து ஆரம்பித்து இலங்கை தமிழரசுக் கட்சியின் செயலதிபர் அமிர்தலிங்கம் கட்சியின் தலைவர்களான யோகேஸ்வரன், ஆலாலசுந்தரம், சுந்தரலிங்கம், சிதம்பரம், டாக்டர் நீலன் திருச்செல்வம், மாவை சேனாதிராஜா ஆகியோருடன் இணைந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியை வளர்த்தெடுத்தார்.

19%8, ஆம் ஆண்டு மாவட்ட சபைத் தேர்தலில் தமிழர்களின் சார்பில் சம்மாந்துறை பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தினார். அதைத் தொடர்ந்து கட்சிக்காக ஐயா வேல்முருகுடன் இணைந்து தமிழ் மக்களின் உரிமைக்காக பல ஆர்ப்பாட்டங்கள், சத்தியாக்கிரகப் போராட்டங்கள் உடன் இணைந்து தமிழர்களின் உரிமை குரலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் தன்னையும் இணைத்துக் கொண்டார். அதன் பிற்பாடு 1989 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளில் அம்பாறை மாவட்ட தமிழர்கள் சார்பாக பாராளுமன்ற தேர்தல்களில் போட்டியிட்டு கூடிய வாக்குகளை பெற்றிருந்தார்.

தன்னுடைய தொழில் வைத்தியராக இருந்தாலும் தன்னுடைய வைத்திய துறையிலும் பாரிய சேவைகளை ஆற்றியிருந்தார். இவ்வாறு தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் பேரன்பையும் பெற்றிருந்தார். தொடர்ந்து அரசியலில் தன்னை இணைத்துக்கொண்டு அம்பாரை மாவட்ட தமிழர்களின் அபிவிருத்தி, தொழில் வாய்ப்பு, தமிழர்களின் எதிர்காலம் என்பவற்றை உயர்த்துவதற்கு பல அமைச்சர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கு உதவிகளையும் ஒத்தாசைகளையும் புரிந்தார்.



அந்த வகையில், முன்னைநாள் அமைச்சர் எம். எச்.எம் அஸ்ரப்புடன் இணைந்து அம்பாறைத் தமிழர்களின் அபிவிருத்தியில் முன்னின்று உழைத்தார். மிக முக்கியமாக இளைஞர்களின் தொழில் வாய்ப்பை கருத்திற்கொண்டும் அமைச்சருடன் அடிக்கடி கண்டு பேசி பல நூற்றுக்கணக்கான தொழில் வாய்ப்பினை அம்பாரை மாவட்ட தமிழர்களுக்கு பெற்றுக்கொடுத்த பெருமை டாக்டர் எஸ் கதிர்காமத்தம்பியையே சாரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அன்னார் இறந்து 21 வருடங்கள் கடந்துவிட்டாலும் இன்னும் தமிழ் முஸ்லிம் சிங்கள மக்களின் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

# இந்திய வெளியுறவு செயலாளரை சந்தித்தார் மிலிந்த மோரகோட



இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய வெளியுறவு செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லாவை இன்று, புதுடெல்லியில் உள்ள வெளியுறவு அமைச்சகத்தில் சந்தித்து பேசியுள்ளார்.

இந்த சந்திப்பு புதிதாக வருகை தந்த இராஜதந்திர தூதுவர்கள், இந்திய வெளியுறவு செயலாளரை சந்திக்கும் நடைமுறைக்கு ஏற்ப நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலின் போது, இருவரும் பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த பல விஷயங்களைப் பற்றி விவாதித்துள்ளனர்.

உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட மொரகொட, நம்பிக்கையை வளர்ப்பதற்கான ஒரு வழிமுறையாக மக்களிடையே தொடர்புகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

# வீதியில் மயங்கிக் கிடந்தவர் வைத்தியசாலையில் அனுமதி

(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை - கொழும்பு பிரதான வீதி புணானை பகுதியில் மயங்கிக் கிடந்த நபரொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

வீதியோரம் விழுந்து கிடந்த நபரைக் கண்ட சிலர் ஆம்புலன்ஸ் சேவைக்கு அழைத்து அவரை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் பயணித்த போதே இவ்வாறு மயங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

நோய் காரணமாக மயங்கி விழுந்தாரா அல்லது யாராவது விபத்தை ஏற்படுத்திவிட்டு சென்றுள்ளார்களா எனும் விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த இந்நபர் ரிதிதென்ன பகுதியில் தொழில் செய்து வருபவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊரடங்கில் உலர்ந்த உறவுகளுக்கு உலருணவு உதவி!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தினால், பாதிக்கப்பட்ட மிகவும் வருமானம் குறைந்த ஒரு தொகுதி மக்களுக்கு உலருணவு நிவாரணம் வழங்கப்பட்டது.

சுவிஸில் வாழும் பாண்டிருப்பைச்சேர்ந்த விஜிஜீவா தம்பதியினரின் திருமணநாளையொட்டி, பிரபல சமுகசேவையாளரும், காரைதீவு பிரதேசசபைத்தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் இவ்வுதவியை வழங்கி வைத்தார்.

ஆலையடிவேம்பு, திராய்க்கேணி, குண்டுமடு ,காரைதீவு ஆகிய பிரதேசங்களிலுள்ள ஒரு தொகுதி மக்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

அவ்வமயம் சமுகசெயற்பாட்டாளர் ஜெயசிறில் கூறுகையில்:

தமிழ் உணர்வு ,தமிழ் பற்று என்பது விஜிஜீவா தம்பதியினரில் ஊறிப்போன ஒன்று. தேவைகள் உள்ள இடத்திற்கு தேவையினை பூர்த்தி செய்யும் சிறந்த சமூக சேவையாளர். சிறந்த தமிழ்ப் பற்றாளர் ஜீவா. எந்த ஒரு விடயம் என்றாலும் நேரடியாக தொடர்பினை ஏற்படுத்தி சிறந்த ஆலோசனைகளையும், கருத்துக்களையும் எடுத்துக் கூறுவதோடு, பல இல்லறம் அற்ற ஏழைகளுக்கு இல்லறம் அமைத்துக் கொடுத்ததோடு, பல கல்வி செயல்பாட்டுக்கும் மட்.அம்பாரை மாவட்டத்தில் வித்திட்ட அன்பான குடும்பம்.

நல்லவன் கெட்டவன் என்று வேறுபாடுகள் இல்லாமல், எல்லோர்க்கும் சமமாய் பொழிகின்ற மழை போல், மக்கள் தேவைக்காக உதவும் கரங்கள் ,மக்கள் மனதை வென்ற சமூக தொண்டனே. மக்களுக்கு சேவை செய்யும் மக்கள் மகுடமே! குறை தீர்க்கும் கொடை வள்ளலே . அமுத சுரபி போல உங்கள் சேவை எங்கள் மண்ணுக்கு தேவை.

விஜி அண்ணா ஜீவா அண்ணி உங்கள் இருவருக்கும் இனிய திருமண நாள் நல்வாழ்த்துக்கள். இன்னும் பல ஆண்டுகள் சீரும் சிறப்புடன் வாழ இறைவனை பிரார்த்திக்கிறேன் வாழ்க வளமுடன் வாழ்க பல்லாண்டு! என வாழ்த்தினார்.



# கிராமத்துக்கு ஒரு வீடு திட்டத்தில் தவிசாளரால் அடிக்கல் நாட்டப்பட்டது



எமது நாட்டின் அதிமேதகு ஜனாதிபதியின் 'கிராமத்திற்கு ஒரு வீடு 'என்ற திட்டத்திற்கு அமைவாக தமிழ் மக்கள்விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களின் சிபார்சுக்கு அமைவாக கோறளைப்பற்று பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பேத்தாழை.நாசிவன் தீவு, கொண்டையங்கேணி.. கிண்ணையடி.மருதநகர்.. கண்ணகிபுரம் எனும் ஆறு கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட வீட்டுப்பயனாளிகளுக்கு இன்று கோறளைப்பற்று பிரதேசசபைத் தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் தலைமையிலான கட்சியின் கிராமிய மட்ட அங்கத்தவர்களால் அத்திபாரக்கல் வைக்கப்பட்டு வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



# நாராயணபிள்ளை நாகேந்திரன் அரச சேவையிலிருந்தும் அதிபர் சேவையிலிருந்தும் ஓய்வு

(ரக்ஸனா )

களுவாஞ்சிகுடி மட்.பட்.பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையில் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1இல் நிருவாகத்திற்குப் பொறுப்பான பிரதி அதிபராக கடமையாற்றிய நாராயணபிள்ளை நாகேந்திரன் அவர்கள் தனது அறுபதாவது வயதினை பூர்த்திசெய்து முப்பது வருட கல்விச்சேவையிலிருந்தும், 16.09.2021 ஆம் திகதி வியாழக்கழமை அரச சேவையிலிருந்தும் ஓய்வு பெறுகின்றார்.

நாராயணபிள்ளை சந்திரசோதியின் நான்காவது புதல்வராக ஆறு சகோதரங்களுடன் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியினை மட்.பட்.களுவாஞ்சிகுடி சரஸ்வதி வித்தியாலயத்திலும், தொடர்ந்து மட்.பட்.பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடியிலும் கற்று தனது கலைமாணிப்பட்டப் படிப்பினை பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக நிறைவு செய்து அரசியல் விஞ்ஞானத்துறையில் முதுமாணிப்பட்டத்தினையும், இந்து தர்மாசிரியர் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார். பட்டப்பின் கல்வி டிப்ளோமா, பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா, விசேட பயிற்றப்பட்ட விவசாய ஆசிரியர் என்பவையும் இவரது தொழிற்தகைமைகளாகும்.

இவர் தனது ஆரம்ப நியமனத்தை மட்.பட்.மகிழூர் முனை சக்தி வித்தியாலயத்தில் கடமையேற்றதோடு கமு.கமு.உவெஸ்லி உயர்தர பாடசாலையிலும், மட்.பட்.எருவில் கண்ணகி மகா வித்தியாலயத்திலும் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். மட்.பட்.எருவில் கண்ணகி மகா வித்தியாலயத்தில் அதிபர் சேவையில் இணைந்து, இறுதியாக மட்.பட்.பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை களுவாஞ்சிகுடியிலும் தனது சேவையினை ஆற்றியுள்ளார்.

இவர் தனது பாடசாலைக் கல்விச் சேவைக்காலத்தில், விவசாய பாடத்தையும், உயர்தரத்திற்கு அளவையியலும் விஞ்ஞானமுறையும் சிறப்பாக கற்பித்து பல மாணவர்களை பல்கலைக்கழகங்களிற்கு அனுப்பி பெருமைப்படுத்தியுள்ளார். மேலும் இவர் தனது பாடசாலைக்கல்வி நடவடிக்கைகளுக்கு மேலாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் புதிய பாடநூலாக்க பணியில் எழுத்தாளராகவும், பதிப்பாசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். மற்றும் 2005ஆம் ஆண்டு முதல் தேசிய கல்வி நிறுவகத்தினால், நடாத்தப்படுகின்ற கல்விமாணி பட்டக்கற்கை நெறியின் பகுதிநேர விரிவுரையாளராக கடமையாற்றிய போது இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் போன்றோர்களுக்கு ஆசானாக இருந்து கற்பித்தவரும் ஆவார். இக் கற்கை நெறியின் விடைத்தாள் மதிப்பீட்டாளராகவும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் இறுதி நிலைப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டாளராகவும் கடமையாற்றியுள்ளார். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் ஆசிரிய உதவியாளராகவும் ஆசிரியர்களை மேற்பார்வை செய்து கடமையாற்றியுள்ளார்.



பாடசாலைக் காலங்களில் கற்றல் கற்பித்தலுக்கு மேலதிகமாக கல்விச் சுற்றுலா, கல்விக் கண்காட்சி, தமிழ்த்தினப் போட்டி, விளையாட்டுப்போட்டி, போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வுகள், சென்ஜோன்ஸ் அம்பியுலான்ஸ் படையணி, சாரணியம், சுற்றாடல் படையணி, இலவச பாடநூல் இலவச சீருடை, தேசிய அடையாள அட்டை, ஆசிரியர் நலனோம்பல்;, மாணவர் நலனோம்பல், பல்சுகாதாரம், ஒழுக்க நடவடிக்கைகள் போன்ற அளப்பரிய சேவைகளையாற்றியுள்ளார்.

களுவாஞ்சிகுடி மட்.பட்.பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயம் தேசிய பாடசலையில் தனது நிருவாகத்திற்கு பொறுப்பான பிரதி அதிபராக கடமையாற்றியதுடன் ஆக்கபூர்வமான செயற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளார். க.பொ.த(உ.த) தொழில்நுட்பவியல் துறையை ஆரம்பித்தல், விளையாட்டு மைதானம், பார்வையாளர் அரங்கு, ஆரம்பக்கல்வி வகுப்பறை மூன்று மாடிக்கட்டிடம், சுற்றுமதில்கள், திருத்த வேலைகள், ஆசிரியர் ஆளணி ஆகிய சேவைகளை, இக்கல்லூரியின் பழைய மாணவராகவும் ஆசிரியராகவும் இருந்து கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் பிரதம கணக்காளராக சேவையாற்றி அதன் பின்னர் கணக்காளர் சேவையின் விசேட தரத்தினை பெற்றுக்கொண்டு தற்போது கிழக்கு மாகாண பிரதிப்பிரதம செயலாளர்நிதி விடயத்திற்கு பொறுப்பான களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த சிங்கநாயகம் குலதீபன் அவர்களின் பெருமுயற்சியோடு கல்வி அமைச்சுடன் தொடர்புகொண்டு நிறைவேற்றியுள்ளார்.

குறித்த பாடசாலையில் முன்னர் பதவி வகித்த அதிபர் க.தம்பிராசா அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றதன் பின்னர் 03.06.2020 ஆம் திகதி முதல் 23.09.2020 வரை இவர் பாடசாலையில் அதிபராக கடமையாற்றிய காலப்பகுதியில் சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. அதாவது தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நடாத்தப்பட்ட ஆராய்ச்சிப் போட்டியில் ஐந்து நட்டச்சதிர விருதினைப் பெற்றதுடன் சுவீடன் நாட்டினால் நடாத்தப்பட்ட 'STOCHHOLMJUNIOR WATER PRIZE 2020' எனும் சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சிப்போட்டியில் ஆசியாவிலே ஒரே நாடாக இப்பாடசாலையின் மூலமாக இலங்கை தெரிவு செய்யப்பட்டது இவரது காலத்திலேயே ஆகும்.

மேலும் இவர் பல சமய, சமூக சேவைகளை ஆற்றியுள்ளார். களுவாஞ்சிகுடி முகாமை ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் மற்றும் முகாமை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயங்களின் வண்ணக்கர், செயலாளர் பதவிகளை வகித்ததுடன் யுனிசெப் அனுசரனையுடன் சர்வோதயம் மேற்கொண்ட சிறுவர் நிகழ்ச்சித்திட்ட வளவாளராகவும், களுவாஞ்சிகுடி சைவமகா சபையின் தலைவராகவும், தற்பொழுது மண்முனை தென் எருவில் பற்று பிரதேச கலாசார அதிகார சபையின்; உபதலைவராகவும் பிரதேச கலாசார பேரவையின் நிருவாக உறுப்பினராகவும், மட்டக்களப்பு மாவட்ட கலாசார அதிகார சபையின் உப செயலாளராகவும், மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கத்தின் நிருவாக சபை உறுப்பினராகவும், மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் நிருவாக சபை உறுப்பினராகவும், கோவில் போரதீவு கண்ணகி தென்கண்ட கமநல அமைப்பின் தலைவராகவும் இருந்து பல மகத்தான சேவைகளை ஆற்றியமைக்காக நீதி அமைச்சு இவருக்கு அகில இலங்கை சமாதான நீதிவான் பதவியினை வழங்கியுள்ளது.

அத்தோடு இவர் கலை இலக்கிய எழுத்தாக்கப் போட்டிகளில் தேசிய, மாகாண, மாவட்ட, மட்டங்களில் வெற்றியீட்டி பரிசில்களையும் விருதுகளையும் பெற்றுள்ளதுடன் பல நூல்களையும் வெளியீடு செய்துள்ளார். குரு பிரதீபா பிரபா, கலைச்சுடர், ஐந்து நட்சத்திர விருது போன்ற இன்னும் பல விருதுகளை தமதாக்கி கொண்டவராவார்.

இவ்வாறு கல்வி, சமய, சமூக சேவைகளை அர்ப்பணிப்போடு மேற்கொண்டு ஒழுக்கம், நேர்மை என்பவற்றை இரு கண்கள் போன்று தமது வாழ்நாளில் கடைப்பிடித்து வந்த இவர் மனைவி மக்களுடன் அகவை அறுபதில் தனது சேவைக்கால ஓய்வை மனமகிழ்வுடன் கொண்டாடி நூறாண்டு காலம் பெரு வாழ்வு வாழ கல்விச் சமூகம் வாழ்த்துகின்றது.

# ஒலுவில் துறைமுகத்திற்கு அமைச்சர் மோஹான் பிரியதர்சன டி சில்வா விஜயம்





(எம்.ஐ.எம்.றியாஸ்)

ஒலுவில் துறைமுகத்திலுள்ள குறைபாடுகளைக் நேரடியாகப் பார்வையிட்டு கண்டறியும் முகமாக நேற்று கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ் நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்சன டி சில்வா விஜயம் செய்தார்.

இதன்போது ஒலுவில் துறைமுகத்தில் மண் மூடப்பட்ட பகுதிகளை இராஜாங்க அமைச்சர் பார்வையிட்ட பின்னர் ஒலுவில் துறைமுக அதிகாரிகள் மற்றும் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் இது விடயமாக கலந்துரையாடினார்.

துறைமுகத்தை மீள இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை மீனவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கலாம். ஆனால் ஒலுவில் பிரதேசத்தின் கடலரிப்பு விடயத்தினை உடனடியாக கட்டுப்படுத்துவதற்கான வேலைகளை செய்ய வேண்டும். ஆகவே இப்பிரதேச மக்களின் தேவையினை நிவர்த்தி செய்வதோடு துறைமுகத்தில் மூடப்பட்டுள்ள மண்ணினை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

இதன் பின்னர் ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பின்பகுதி கடலரிப்பு காரணமாக மிகமோசமாகப் பாதிக்கப்பட்டு இருந்தது.கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ் நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் கடலரிப்பினை தடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.இவ்வேலைத்திட்டங்களையும் இராஜாங்க அமைச்சர் நேரில் சென்று பார்வையிட்டார். அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களான அறுகம்பை, ஒலுவில்,நிந்தவூர்,காரைதீவு உள்ளிட்டபிரதேசங்களில் கடலரிப்பினை கட்டுப்படுத்துவதற்காக கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ் நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் 5கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது வேலைகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பிட்ட வேலைகளை இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்சன டி சில்வா மற்றும் அதிகாரிகளுடன் நேரடியாக சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் மாவட்ட பொறியியலாளர் கே.எம்.றிபாஸ் உட்பட உயர் அதிகாரிகள் துறைமுக அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தமிழ் கைதிகள் இருவரை மிரட்டிய இராஜாங்க அமைச்சரின் நடவடிக்கை ஜனநாயகத்தை வன்மையாக கண்டிக்கிறேன்: கலாநிதி வி ஜனகன்

இன்று தமிழ் பேசும் இளைஞர் யுவதிகள் பலர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாக உரிய விசாரணை இல்லாமல் சிறைகளில் கைதிகளாக கொடுமைகளை அனுபவித்து வருகின்றனர்.

கைதிகளின் நலனை பேணும் நோக்குடன் உருவாக்கப்பட்ட அமைச்சில் இராஜாங்க அமைச்சராக இருக்கும் லொகான் ரத்வத்த அவர்கள், வேலியே பயிரை மேய்தலுக்கு ஒப்பாக இரண்டு தமிழ் அரசியல் கைதிகளை தனக்கு முன்னால் முளங்காலில் இருக்கச் செய்துள்ளார். அதுமட்டுமன்றி தனது பாதுகாப்பு உத்தியோகத்தரின் உதவியுடன் துப்பாக்கி முனையில் அவர்களை இவ்வாறு முளங்காலில் நிற்பதற்கு வற்புறுத்தியுள்ளார் என தெரியவந்துள்ளது. இவ்வாறான எல்லை மீறிய நடவடிக்கையை ஜனநாயகத்தை கொச்சைப்படுத்தும் செயல் எம்மால் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இதனை தேசிய ஒருமைப்பாட்டு முன்னணியின் தலைவர் என்ற அடிப்படையில் வன்மையாக கண்டிக்கின்றேன் என கலாநிதி வி ஜனகன் அவர்கள் தன்னுடைய அறிக்கையூடக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிடும் போது, இலங்கையில் பல ஆண்டுகளாக பயங்கரவாத தடைச்சட்டத்தினைப் பயன்படுத்தி தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்களை கைது செய்து உரிய நீதிமன்ற விசாரணைகள் ஏதும் இன்றி தடுத்துவைக்கும்



செயற்பாடு ஒரு தொடர் கதையாகவே உள்ளது.

இந்நிலையில் இவ்வாறு சிறைகளில் கைதிகளாக வாடும் எமது இளைஞர்களை வன்கொடுமைக்கு ஆளாக்கும் நடவடிக்கைகள் பல மட்டங்களில் இடம்பெறுவாறு தான் உள்ளன. ஆனால் இன்று, அதன் உச்ச கட்டமாக இலங்கையின் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் ஒருவரே இவ்வாறன இழிவான செயலில் ஈடுபட்டுள்ளார் என தெரியவருவது எம்மை மேலும் வருத்தத்திற்குள் உள்ளாக்கியுள்ளது.

சர்வதேச மட்டத்தில் கைதிகளை பாதுகாக்கும் உடன்படிக்கையில் பங்காளியாக இருக்கும் இலங்கை, அந்த நடைமுறைகளை பின்பற்ற வேண்டிய கட்டாயத்தினை மறந்து தொடர்ச்சியாக தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர் யுவதிகளை பழிவாங்கும் கருவியாக இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தினை பயன்படுத்திவருகின்றது. இதனால் தான் இன்று அமைச்சர் ஒருவரே இவ்வாறன இழிவான செயலை எந்த நெருடலும் இன்றி செய்துள்ளதாக தெரியவருகின்றது. இந்த நடவடிக்கையை எம்மால் எக்காரணத்தின் அடிப்படையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

நிராயுதபாணியாக சிறையில் இருந்த கைதிகள் இருவரை துப்பாகிமுனையில் முளங்கால்களில் தன்முன்னால் அமரவைத்த அமைச்சர் லொகான் ரத்வத்த அவர்கள், ஒரு ஜனநாய நாட்டின் அமைச்சராக இருப்பதற்கான தகுதியை இழந்துவிட்டார். ஆகவே அவர் தன்பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என தேசிய ஒருமைப்பாட்டு முன்னணி தன்னுடைய கோரிக்கையை இந்த அறிக்கையினூடக வலியுறுத்தியுள்ளார்.

மேலும், சிறைகளில் இருக்கும் அரசியல் கைதிகளின் பாதுகாப்பு முழுமையாக பேணப்பட வேண்டும். இன ரீதியான இவ்வாறான வன்கொடுமைகள் தேசிய ஒருமைப்பாட்டுக்கு பாரிய சவாலாக காலம் காலமாக இலங்கையில் உள்ளது என்பதனை ஜனாதிபதி அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்த நாட்டினை கட்டி எழுப்ப அனைத்து இனங்களையும் ஒருசேர அரவணைப்பது அவரின் தலையாய கடமை என்பதனை உணர்ந்தவராக இப்படியான ஈனத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மேலும் கேட்டுக்கொள்கின்றோம் என கலாநிதி வி ஜனகன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்

# தலவாக்கலை நகரில் சம்பள முரண்பாடு தொடர்பாக தெளிவூட்டல்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

அதிபர் ஆசிரியர்களது சம்பளம் முரண்பாடு மற்றும் இலவச கல்விக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற சதிகளை முறியடிக்கும் முகமாக ஒன்றிணைந்த அதிபர் ஆசிரியர் தொழிற்சங்கங்களால் கடந்த இரு மாதங்களாக மேற்கொண்டு வரும் போராட்டம் தொடர்பாக ஒன்றிணைந்த அதிபர்,ஆசிரியர் தொழிற்சங்கங்களின் சார்பாக தலவாக்கலை நகர பௌத்த விகாரையின் விகாராதிபதி, முஸ்லீம் பள்ளிவாசலின் மௌலவி, கிறிஸ்தவ தேவாலயத்தின் அருட்தந்தை, இந்து ஆலயத்தின் பிரதமகுரு, ஆலய பரிபாலன சபை தலைவர், மக்கள் வங்கியின் முகாமையாளர், இலங்கை வங்கியின் முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் மற்றும் தலவாக்கலை நகர வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆகியோரை சந்தித்து அதிபர்,ஆசிரியர்களின் போராட்டம் தொடர்பாக தெளிவூட்டப்பட்டது.

